Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும்
பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்
இல. 13, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 3916, 0777 801038
(சி/2485)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆவணி 05 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ரஜப் 04 (21.08.2004) சனிக்கிழமை இதழ்:323

## யாழ். படைகளின் புதிய தளபதியாக மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் நேற்றுப் பதவியைப் பொறுப்பேற்றார்!



(யாழ்ப்பாணம்)

யாழ்.பாதுகாப்புப்படைத் தலைமையகக் கட்டளை அதிகாரியாக மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் நேற்றுப் பதவியேற்றார்.

யாழ். படைத்தலைமையகத்தில் தனது பொறுப்புக்களை ஏற்றுக் கொண்ட மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனுக்கு ஆட்லறி படைப்பிரிவு அணிவகுப்பு மரியாதையை அளித்தது.

சமய வைபவங்களுடன் நடைபெற்ற இந்தப் பதவியேற்பு நிகழ்வின் பின்னர் யாழ்.குடாநாட்டில் நிலைகொண்டிருக்கும் - 51 ஆவது, 52 ஆவது, 53ஆவது, 55ஆவது, டிவிசன்களின் கட்டளை அதிகாரிகளுடன் விஷேட கலந்துரையாடலை மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் நிகழ்த்தினார்.

இவர் இன்று படைகளைச் சந்திக்கவிருப்பதாக (12 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லைக் கந்தன் உற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் புகழ் மிக்க நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று முற்பகல் 10 மணிக்கு விஷேட கிரியைகளுடன் கொடியேறி தொடர்ந்து 25 தினங்கள் மகோற்சவம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி மஞ்சத் திருவிழாவும், அடுத்த மாதம் 13 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.

உற்சவ காலத்தில் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக - யாழ். மாநாகரசபை தெரிவித்துள்ளது.

இதேவேளை - கொடியேற்றத்தினைக் கண்டுகளிப்பதற்காக நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பக்தர்கள் வந்து சேர்ந்துள்ளனர்.



ஆலய சூழலில் வியாபாரங்களைச் செய்வதற்காக நேற்றுக் காலை முதல் வர்த்தகர்கள் வியாபார நிலையங்களை அமைக்கும் பணிகளில் ஈடுபட்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

# மட்டக்களப்பு தாக்குதலில் நேற்று மாலை புலிகளின் இரு சிரேஷ்ட போராளிகள் பலி!

## இராணுவ காவலரண் அருகே சம்பவம்

(மட்டக்களப்பு)

***மட்டக்களப்பு காயங்கேணிப் பகுதியில் இடம்பெற்ற கிளைமோர் மற்றும் துப்பாக்கிப் பிரயோகத் தாக்குதலில் விடுதலைப்புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இருவர் கொல்லப்பட்டதுடன் மற்றொரு பெண் போராளி படுகாயமடைந்தார்.***

நேற்றுப் பிற்பகல் சுமார் 2.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் - விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட முன்னாள் அரசியற்துறைப் பொறுப்பாளர் பாவா (செல்வராசா ஜெகதீஸ்வரன்- திருக்கோவில், விநாயகபுரம்) மற்றும் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டப் புனர்வாழ்வுப் பொறுப்பாளர் யோகன் ஆகிய இருவருமே கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் வேணுகா என்ற பெண் போராளி படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் .பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வாகரைப் பிரதேசத்திலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு மூன்று மோட்டார் சைக்கிள்களில் இவர்கள் சென்றவேளை - மாங்கேணிக்கும், காயங்கேணிக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ள புல்லாவிச் சந்திப்பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

முனனதாக கிளைமோர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும், அதன்பின்னர் - துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து 100 மீற்றர் தொலைவில் படையினரின் காவலரண் அமைந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற வேளை - புல்லாவிச் சந்திக் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அளவெட்டிப் பகுதியில் நேற்று இளைஞர் வெட்டிக்கொலை!

(அளவெட்டி)

வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் இடைமறித்து வெட்டிக்கொலைசெய்யப் பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை அளவெட்டிப்பகுதியில் இடம் பெற்றது.

சங்குவேலி வடக்கு மானிப்பாயைச் சேர்ந்த சுப்பையா தர்மலிங்கம் (வயது - 26) என்ற இளைஞரே வெட்டிக்கொலைசெய்யப்பட்டார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

அளவெட்டிப் பகுதியில் நடைபெற்ற திருமணச் சடங்கு ஒன்றுக்குச் சென்றுவிட்டு வீடுதிரும்பிக்கொண்டிருந்தபோது (12 ஆம் பக்கம் பார்க்க)

## செல்வச்சந்நிதி ஆலயமருகே ஆற்றில் மூழ்கிய இளைஞன் மரணம்!

(தொண்டமனாறு)

செல்வச் சந்நிதி ஆலயத்துக்குச் சென்ற இளைஞர் ஒருவர் நண்பர்களுடன் ஆற்றில் நீராடிக் கொண்டிருந்த வேளை, நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுக்காலை பதினொரு மணியளவில் இடம் பெற்றது. உயிரிழந்தவர் புலோலி தெற்கு புலோலியைச் சேர்ந்த மாணிக்கவாசகம் - நிரஞ்சன் ( வயது - 20) என்ற இளைஞராவார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் சக்திவாய்ந்த அன்ரனா கொழும்பில் பொருத்தப்பட்டுள்ளதாம்!

### பொலிஸ் வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

படையினரின் தொலைத் தொடர்பை ஒட்டுக்கேட்கும் வகையில் அதிசக்தி வாய்ந்த செய்மதி அன்ரனா ஒன்றினை விடுதலைப் புலிகள் கொழும்பில் வைத்திருப்பது தொடர்பாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலுள்ள தமிழ் வர்த்தகர் ஒருவரது வீட்டிலேயே இந்தச் செய்மதி அன்ரனா பொருத்தப்பட்டுள்ளமை தொடர்பான தகவல்கள் தமக்குக் கிடைத்துள்ளதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்புத் துறைமுகத்துக்கும், (12 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைக்கு தீர்வு காண அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் விரைவில் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்!

### அமெரிக்கா மீண்டும் வலியுறுத்து

இலங்கையின் இனப்பிரச்சினைகுத் தீர்வு காண்பதற்காக அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்து விரைவாக சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

அமெரிக்க பிரதி இராஜாங்கச் செயலாளர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லன்ங்ஸ்ரீட் ஆகிய இருவரும் இணைந்து கூட்டாக வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டுள்ளதையடுத்து ஏற்பட்டுள்ள வன்முறைச் சம்பவங்களை விமர்சித்து வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டும். இதற்காக இரு தரப்பினருக்குமிடையில் நம்பிக்கை கட்டியெழுப்பப்பட வேண்டும்.

இரு தரப்பினருக்குமிடையில் ஓர் இணக்கப்பாடு ஏற்படுத்தப்பட்டு விரைவாகச் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க நடவடிக்கை (12 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்களில் நோர்வேயினது பங்களிப்பு தேவையில்லையெனில் ஒதுங்கத் தயார்!

### தூதரகச் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகளில் நோர்வேயின் பங்களிப்புத் தேவையில்லை என்றால், தாம் அம்முயற்சியிலிருந்து விலகிக் கொள்ளத் தயாராக இருப்பதாக இலங்கையிலுள்ள நோர்வேத் தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் கிஜிஸ்டா ரொய்டா தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மகாண முஸ்லிம் சமாதானப் பேரவைக்கும், நோர்வேத் தூதரகப் பிரதிநிதிகள் குழுவுக்கும் இடையில் நேற்று காத்தான்குடியில் இடம் பெற்ற சந்திப்பின்போதே - அவர் இவ்வாறு கூறினார்.

இது குறித்து இச்சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கையின் சமாதானச் செயற்பாடுகளில் இதுதான் தீர்வு என எதனையும் திணிக்கும் நோக்கம் நோர்வேக்கு இல்லை.

(12 ஆம் பக்கம் பார்க்க)

நமது ஈழநாடு

# இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்படும் கலை, இலக்கிய - போட்டிகள்

நமது ஈழநாடு பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி கலை - இலக்கியப் போட்டிகளை நடத்துவதற்கு தீர்மானித்திருப்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

## போட்டிக்கான விதிகள்

### சிறுகதை மற்றும் கவிதைப் போட்டி

- படைப்புக்கள் யாவும் படைப்பாளியின சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும் - மொழிபெயர்ப்புக்கள் நிராகரிக்கப்படும்.
- சிறுகதைகள் யாவும் தெளிவான எழுத்திலோ, தட்டச்சு செய்யப்பட்டோ இருத்தல் வேண்டும். கையெழுத்தில் 7 பக்கங்களுக்குள்ளும் - தட்டச்சில் 5 பக்கங்களுக்குள்ளும் இருப்பது அவசியம்.
- கவிதைகள் மரபுக்கவிதையாகவோ அல்லது புதுக்கவிதையாகவோ இருக்கலாம். எதுவானாலும் 20 முதல் 30 வரிகளுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்கள் யாவும் சமகால சமூகவியல் - வாழ்வியல் பிரச்சினைகளை மையமாகக் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.
- ஆக்கங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 15-09-2004 ஆகும்.

### புகைப்படப் போட்டி

- புகைப்படத் துறையில் ஆர்வமுள்ளவர்கள் தொழில் சார் கலைஞர்கள் எவரும் இதில் பங்குபற்றலாம் - வயது வேறுபாடில்லை.
- போட்டிக்கு அனுப்பப்படும் படங்கள் கறுப்பு வெள்ளைப் படங்களாகவும் இருக்கலாம். வண்ணப்படங்களாகவும் இருக்கலாம். அளவு 6 CM X 4 CM ஆக இருத்தல் அவசியம்.
- புகைப்படங்கள் - எமது மண்ணின் இயற்கையழகு எமது மண்ணின் பாரம்பரியம், சமகால வரலாற்றுப் பதிவுகள் ஆகியவற்றைப் பதிவு செய்ததாக இருக்கவேண்டும்.
- ஒருவர் மூன்று படங்கள் வரை அனுப்ப முடியும். ஆனால் ஒரு படத்துக்கு மட்டுமே பரிசு வழங்கப்படும்.
- புகைப்படங்களுடன் பெயர் விலாசம் போன்றவை தனியாக இணைக்கப்படல் வேண்டும்.
- அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 15-09-2004 ஆகும்.

### கையெழுத்து சஞ்சிகை உருவாக்கல் போட்டி

*நிபந்தனைகள்*

இந்தப் போட்டி இரண்டு பிரிவுகளாக நடத்தப்படும்.

1. பாடசாலை மாணவர்களுக்கானது.
2. தனிநபர் - தனியார் அமைப்புக்களுக்கானது

பாடசாலை மாணவர்களுக்கான போட்டி மத்திய பிரிவு - மேற்பிரிவு என இரு பகுதிகளாக நடத்தப்படும்.

மத்திய பிரிவு- க.பொ.த (சாதாரண) தரத்திற்கு உட்பட்டவர்களுக்குரியது.

மேற்பிரிவு - அதற்கு மேற்பட்டவர்களுக்குரியது.

- போட்டிக்கு சமர்ப்பிக்கப்படும் சஞ்சிகைகள் மாணவர்களின் சுய படைப்பாற்றல் மற்றும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துபவையாக இருக்க வேண்டும்.
- சஞ்சிகைகள் 40 முதல் 50 பக்கங்கள் வரையுள்ளதாகவும் ஒரு அழகான கலைத்துவமான சஞ்சிகைக்குரிய தரமான வடிவமைப்புக் கொண்டதாகவும் தெளிவான கையெழுத்துக்களில் எழுதப்பட்டவையாகவும் இருத்தல் வேண்டும்.
- தனிநபர்கள் - தனியார் அமைப்புகள் ( இலக்கிய வட்டங்கள் - சனசமூகநிலையங்கள்) அனுப்பிவைக்கும் சஞ்சிகைகளும் மேற்குறிப்பிட்ட விதிகளை அனுசரிக்க வேண்டும்.
- மாணவர்கள் தங்களின் சஞ்சிகை தயாரிப்பில் தமது ஆசிரியர்களின் ஆலோசனைகளை நாடமுடியும்.
- மிகத் தரமானதெனத் தேர்தெடுக்கப்படும் - சஞ்சிகைகளுக்குரிய சகல அம்சங்களையும் உள்ளடக்கிய ஆக்கங்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகள் வழங்கப்படும்.
- சஞ்சிகைகள் கிடைக்க வேண்டிய கடைசித் திகதி 15.09.2004
- பதிவுத்தாபாலில் அனுப்புதல் பாதுகாப்பானது - நேரிலும் கையளிக்கலாம்.
- பாடசாலை மாணவர்களின் சஞ்சிகைகள் பாடசாலை வகுப்பாசிரியர் அல்லது அதிபரால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

குறிப்பு:- இப்போட்டிகளில் நமது ஈழநாடு நிறுவன ஊழியர்கள் எவரும் பங்குபற்ற முடியாது.

போட்டிக்கான ஆக்கங்கள்
அனுப்ப வேண்டிய முகவரி:-

| | |
|---|---|
| நமது ஈழநாடு - | நமது ஈழநாடு பணிமனை |
| 267, நாவலர் வீதி, | யாழ் சாலை, |
| யாழ்ப்பாணம். | கிளிநொச்சி. |


# வாக்காளர் இடாப்பு திருத்தம் தென்மராட்சியில் ஆரம்பம்

(மட்டுவில்)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கிராம அலுவலர்கள் ஊடாக வாக்காளர் இடாப்புக்கள் திருத்தம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றது.

இதுவரை தமது பெயர்களை வாக்காளர் இடாப்புக்களில் பதியாதவர்களும், இடாப்புக்களில் திருத்தம் செய்ய வேண்டியவர்களும் உடன் கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 1 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் 18 வயதைப் பூர்த்தி செய்த அனைவரும் கிராம அலுவலர்களிடம் விண்ணப்பத்தைப் பெற்றுப் பூரணப்படுத்தி ஒப்படைக்கும்படியும்,

வாக்காளர் இடாப்புக்களில் பெயர் பதியப்பட்டுள்ளதா என்பதைப் பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள வாக்காளர் இடாப்பிலிருந்து பார்வையிட முடியுமெனவும், தென்மராட்சிப் பிரதேச செயலக கிராம அலுவலர்கள் தெரிவித்துள்ளனர். (24)

# மன்னார் - யாழ் கிரிக்கெட் அணிகள் இன்று யாழ்ப்பாணத்தில் மோதுகின்றன!

இலங்கை கிரிக்கெட் சங்கம் வடக்கு - கிழக்கு மாகாணத்திற்குட்பட்ட மாவட்ட அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி தொடரான மன்னார் மாவட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் மன்னார் - யாழ்ப்பாண மாவட்ட அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி இன்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் சுற்றுப் போட்டியின் இன்னுமொரு போட்டி மட்டக்களப்பு - திருகோணமலை அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ளது.

இந்த இரு போட்டிகளிலும் வெற்றி பெறும் அணிகள் எதிர்வரும் 5 ஆம் திகதி தம்புள்ள மைதானத்தில் நடைபெறும் போட்டியில் கலந்து கொள்வுள்ளதாக யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினர் தெரிவித்தனர். (58)

# மாகாண தடகளப் போட்டி நாளை வவுனியாவில்!

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண தடகளப் போட்டிகள் நாளை வவுனியா பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் நானூறு பேர் வரையில் பங்குபற்றவுள்ளார்கள்.

இந்தத் தடகள விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றுவதற்காக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 67 வீர வீராங்கனைகள் இன்று யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவிற்கு செல்லவுள்ளனர்.

கடந்த வருடம் நடைபெற்ற வடக்கு - கிழக்கு மாகாண தடகளப் போட்டியில் யாழ். மாவட்டம் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். (ப)

# அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் உப.அலுவலகம் கைதடியில் திறப்பு!

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் உப அலுவலகமொன்று நேற்று கைதடிச்சந்திக்கருகில் திறந்து வைக்கப்பட்டது. அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் அ.நல்லதம்பி தலைமையில் நடைபெற்றது

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன், சம்பிரதாயபூர்வமாக நாடாவை வெட்டிப் பெயர் பலகையைத் திரைநீக்கம் செய்து வைத்து உப அலுவலகத்தினை திறந்து வைத்தார்.

நிறுவனத்தின் உபதலைவர் பேராசிரியர் ப.சிவநாதன் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினார். நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் தே.தேவானந் சிறப்புரை ஆற்றினார். தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தலைவர் ஜெயராஜ், தென்மராட்சி அரசியற் துறைப் பொறுப்பாளர் முரளி, ஆகியோர் சிறப்புரையினை நிகழ்தினர்.

இந்நிகழ்வில், கிராமங்களைச் சார்ந்த மாதர் சங்கங்கள், மாதர் குழுக்கள், கிராம அபிவிருத்திச் செயலாளர்கள், பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை விரிவுரையாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## நடுவர்களைத் தெரிவுசெய்ய பயிற்சி வகுப்புக்கள்

வடமராட்சி மென்பந்து துடுப்பாட்ட நடுவர்களைத் தெரிவுசெய்வதற்கான பயிற்சி வகுப்புக்கள் நாளை பிற்பகல் 3 மணிக்கு நெல்லியடி ம்த்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் ஒவ்வொரு கழகத்திலிருந்தும் ஆர்வம் உள்ளவர்கள் கலந்து கொள்ளலாமெனவும், இதுவரை கழகங்களைப் பதிவுசெய்யாதவர்கள் பதிவு செய்யும்படி வடமராட்சி மென்பந்து துடுப்பாட்டச் சங்கச்செயலாளர் ச.சுவேந்திரன் தெரிவித்தார். (12)

## கும்பாபிஷேக தினம்

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ சபரீச ஐயப்ப சுவாமி ஆலயத்தின் கும்பாபிஷேக தினமான இன்று விசேட பூசைகள் இடம்பெறவுள்ளன.

1009 சங்காபிஷேகமும் தொடர்ந்து விசேட பூசைகளும் இடம்பெறுமென ஆலய தர்மகர்த்தா சபை அறிவித்துள்ளது. (82)


# கண்ணீர் அஞ்சலி

| அன்னையின் மடியில் | | அன்னையின் மடியில் |
|---|---|---|
| 11 | | 20 |
| 12 |  | 08 |
| 1918 | | 2004 |

## இராசையா மர்த்தீனம்மா

எபநேசர் ஜெப ஆலயத் தலைமைப் போதகர் ஜோன் ஜெயசீலன் அவர்களின் தாயாராகிய "இராசையா மர்த்தீனம்மா" அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்தோடு அவர்களின் ஆறுதலுக்காக தேவனிடம் ஜெபிக்கிறோம்.

எபனேசர் ஜெப ஆலயம்,
வட்டுக்கோட்டை.

சக போதகர்கள்,
ஊழியர்கள்,
விசுவாசிகள்.

(910)



ஓம்

ஸ்ரீராம ஜெயம்



வண்ணை - யாழ்ப்பாணம்

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

## ஸ்ரீ வரலக்ஷ்மி விரத உற்சவ விஞ்ஞாபனம்

மெய்யடியார்களே!

மங்களகரமான தாரண வருஷம் ஆவணிமாதம் 11ஆம் நாள் (27.08.2004) வெள்ளிக்கிழமை வரலக்ஷ்மி விரதத்தை முன்னிட்டு ஸ்ரீ மஹாலக்ஷ்மி அம்பாளுக்கு காலை 6.30 மணிக்கு அபிஷேகமும் 8.00 மணிக்கு விஷேச தீபாராதனை, அர்ச்சனையும் 10.30 மணிக்கு உற்சவ பூஜையும் நடைபெற்று அம்பாள் பத்மாஸனத்தில் உள் வீதியுலா வருவார். அதன்பின் அடியார்களுக்கு விரத காப்பு வழங்கப்படும். அனைவரும் வந்து அம்பாளை தரிசித்து இஷ்ட சித்திகளை பெற்றுய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சுபம்

இங்கனம்
ஆதீன மகா சபை
ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள்
தேவஸ்தானம்

(சி/906)



## The Royal College of Jaffna

ஆங்கிலத்தில் சுலபமாக 6 மாத காலத்தில் கதைக்கப்பயில கட்டணம் மாதாந்தம் 150/=

By : விக்கினேஸ்வரன் ஆச்சாரி : 426, (302) K.K.Sவீதி, யாழ்ப்பாணம், பிளாக் வீதி, சங்கானை. (சி-2734)



## நாகம்ஸ் சுன்னாகம்



அர்ஜுன், மீனா, சுவாதி நடிப்பில்

அன்பு சகோதரன்

24.08.2004 முதல் ஷாக்

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

(சி-2904)



## நிறைஞ்சனாஸ் சங்கானை

பிரசாந், ஐஸ்வரியா, நாசர் நடித்த

ஜீன்ஸ்

காட்சிநேரம்:11.00. 2.45. 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

ROAD TRIP

(சி-2723)



## ராஜா யாழ்ப்பாணம்.



கமல், சினேகா, பிரபு நடித்த

வசூல்ராஜா MBBS

விரைவில் விஜய் நடித்த

மதுர

காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

(சி-2725)



யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கிடையிலான

## கராத்தே சுற்றுப்போட்டி - 2004

காலம் : 21.08.2004 (சனிக்கிழமை)
நேரம் : மதியம் 12.00 (புதிய நேரம்)
இடம் : உடற்கல்வி அலகு, யாழ்.பல்கலைக்கழகம்.

போட்டியாளர்கள் தங்கள் பட்டிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழுடன் சமுகம் தரவும்

அனைத்து ஆர்வலர்கள், அன்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உடற்கல்வி அலகு,
யாழ்.பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

கராத்தே அணி,
யாழ்.பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

அனுசரணையாளர்கள்:-

Sharp
Browns & Company,
89,Stanly Road,
Jaffna.

மொகமட் ரெய்லர்,
41, ஜிம்மா மொஸ்க் லேன்,
(செம்மா தெரு),
யாழ்ப்பாணம்.

இராசமணி களஞ்சியம்,
ஆலடி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
(பலசரக்கு, பான்சி,
தொலைத்தொடர்பு).

Excape
Tex & Fancy,
K.K.S Road,
Kondavil.

Yaso Motors
163, Stanley Road.
Jaffna.

ஊடக அனுசரணை

நமது ஈழநாடு

## பல்கலைக்கழக அனுமதிக்கான
# வெட்டுப்புள்ளி விபரம் டிசம்பரில் வெளியாகும்!

(கொழும்பு)

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில், பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வெட்டுப்புள்ளிகளை டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி வெளியிடவிருப்பதாகக் கல்வி அமைச்சுத் தெரிவித்துள்ளது.

மீள் திருத்துதல் நடவடிக்கைக்கான விண்ணப்பங்களை அனுப்புவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளதனால், வெட்டுப்புள்ளி வெளியிடுவது தாமதமடைந்து வருவதாகக் கல்வி அமைச்சுத் தெரிவித்தது.

இதேவேளை, இந்த ஆண்டு புதிதாக அறிமுகப்படுத்தவிருக்கின்ற பட்டப்படிப்புக்களுக்காக 130 மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. (தே)

# விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்களை ஜே.வி.பியினர் எடுத்துவர வேண்டுமாம்!

*ராஜித சேனாரட்ண கூறுகின்றார்*

(கொழும்பு)

கொழும்பில் இருந்து தேவையற்ற விதத்தில் கதைப்பதை விடுத்து சம்பூருக்குப் போய் தமிழீழ விடுதலைப் புலிகள்மீது தாக்குதல் நடத்தி, அவர்களின் ஆயுதங்களை ஜே.வி.பியினர் கொழும்புக்குக் கொணடுவர வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண கேட்டுள்ளார்.

இதனை விடுத்து ஜே.வி.பியின் பிரசார செயலர் விமல் வீரவன்ச அரசியல் தெரியாத நிலையில் பேசி வருவது ஏற்றுக்கொள்ள முடியாதது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில் - ஐக்கியதேசியக் க்ட்சியின் ஆட்சியின் போது எவரும் கிளிநொச்சிக்குச் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளைச் சந்திக்க முடிந்தது.

தற்சமயம் அரசாங்க சமாதான செயலர்கூட வடக்கு - கிழக்குக்குச் செல்ல ஐரோப்பிய நாடுகளின் ஊடாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் அனுமதியை பெறவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

இதனை ஜே.வி.பியின் பிரசார செயலரும் சுட்டிக்காட்டியுள்ளதாகத் தெரிவித்த ராஜித சேனாரட்ண,

தாம் ஆட்சியில் இருந்தபோது, மணிராசன் குளம் பற்றி, பேசிய ஜே.வி.பி இன்று கருத்து எதனையும் கூறாமல் இருந்து வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். (01)

# ஒன்றரை மாத சேவை நீடிப்பை கேட்டுப் பெறவில்லையாம்!

## பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

தனக்கு வழங்கப்பட்ட ஒன்றரை மாத சேவை நீடிப்பைத் தான் கேட்டுப் பெறவில்லையென, பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

எனது பதவிக்காலம் முடிவடைந்த பின்னர், அடுத்த படியாக எனது பதவிக்கு வரவுள்ளவர் யார் என்பதை என்னால் கூற முடியாது.

எவ்வாறாயினும், மேலும் ஒன்றரை மாதம் சேவையாற்றுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு எனக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை. நான் இந்தக் காலத்தைக் கேட்டுப் பெறவுமில்லை.

இளைப்பாறிச் சென்ற பின்பு ஆறுமாத காலம் சேவை நீடிப்பு வழங்கப்பட்டது, அழுத்தங்களினாலோ, நான் கேட்டோ அல்ல. எனக்குக் கிடைத்த இந்தக் குறுகிய காலத்தைக் கடமை உணர்வுடன் நேர்மையாக நிறைவேற்றுவேன் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, அடுத்த பொலிஸ் மா அதிபர் பதவிக்கு, பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் மூவர் தகுதியானவர்களாக இருப்பதாக, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

பொலிஸ் மா அதிபர் பதவியைப் பெற்றுக் கொள்வதில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்களிடையே எந்தவித அதிகார சிக்கல்களும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார். (தே)

# துமிந்த சில்வாவை ஐ.தே.க. நீக்கியது!

சிறுமி ஒருத்தியைப் பாலியல் வல்லுறவில் ஈடுபடுத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட மேல்மாகாணசபை உறுப்பினர் துமிந்த சில்வாவின் கட்சி அங்கத்துவப் பதவியைத் தடைசெய்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக்குழு கடந்த புதன்கிழமையன்று தீர்மானித்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கோட்டை சிறிகோத்த மத்திய செயலகத்தில் நடைபெற்ற, ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக்கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

கட்சியின் அரசியல் நடவடிக்கைக் குழுமூலம் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரை, துமிந்த சில்வாவை கட்சியின் அங்கத்துவத்திலிருந்து நக்குமாறு கோரியிருந்தது.

இதன்படி கட்சி அங்கத்துவப் பதவியில் இருந்து துமிந்த சில்வா நீக்கப்பட்டுள்ளதனால், அவர் மாகாண சபைக் கூட்டங்களில் பங்குபற்றுவதற்கு அனுமதி வழங்கப்படாததோடு, ஐக்கிய தேசியக் கட்சியின் எந்தவொரு நடவடிக்கையிலும் ஈடுபடுவதற்குத் தடை செய்யப்பட்டுள்ளது. (தே)

# நாடாளுமன்ற அமர்வுகள் ஒருமணி நேரத்தால் நீடிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற சபை அமர்வுகள் இடம்பெறும் நேரத்தை ஒரு மணித்தியாலத்தால் நீடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதல் சபை அமர்வுகள் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி, பிற்பகல் 4.30 மணிக்கு முடிவடையும்.

நாடாளுமன்ற அமர்வுகளின் காலவரையறையை நீடிப்பதற்கான யோசனையை அமைச்சர் மைத்திரிபால சிறிசேன முன்வைத்தார்.

இதற்கு நாடாளுமன்றத்தின் அனுமதி கிடைத்துள்ளது.

தற்பொழுது நாடாளுமன்ற அமர்வுகள் காலை 10 மணிக்கு ஆரம்பமாகி, மாலை 4 மணிக்கு நிறைவடைகின்றமை குறிப்பிடத்தக்கது. (01) (தே)

# கிழக்கு வன்முறைகளை தடுப்பதற்கு நடவடிக்கை

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு மற்றும் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை பொலிஸ திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் கடந்த புதன்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வா தெரிவித்தார்.

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வன்முறைச் சம்பவங்களை இதன் மூலம் கட்டுப்படுத்தமுடியும்.

ஜனாதிபதிக்கு இந்தச் செயற்திட்டம் தொடர்பாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலகளின் அடிப்படையிலேயே இநத நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இதற்காக விசேட பொலிஸ் குழுக்களும் ஈடுபட்டுள்ளன. இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகக் கிழக்குப் பிராந்திய பொலிஸ்மா அதிபர் நெவில் விஜயசிங்க தெரிவித்தார்.

இதற்கான ரோந்து நடவடிக்கைகளும், திடீர் சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## ஐந்து அகதிகள் மன்னார் திரும்பினர்

தமிழ்நாட்டின் கருவூர் அகதி முகாமில் தங்கியுள்ள ஈழத்தமிழ் அகதிகளில் ஐவர் நேற்று முன்தினம் கடல்மார்க்கமாகத் தலைமன்னார் வந்தடைந்தனர்.

சிறிய கண்ணாடி இழைப்படகில் வந்த இவர்களை தலைமன்னார் பொலிஸார் நேற்று மன்னார் நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

இவர்களை அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிவான் உத்தரவிட்டதற்கமைய இந்த அகதிகளின் சொந்தஇடமான சாவகச்சேரி மற்றும் வவுனியா மணிப்புரம் பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.' (201)

# கொலைகளுடன் தொடர்புடையவர்களை கைது செய்வதற்கே தேடுதல் நடத்தப்பட்டது !

*வாழைச்சேனை பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு*

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெறும் கொலைச் சம்பவங்களோடு தொடர்புடையவர்களைக் கைது செய்வதற்காகவே, வாழைச்சேனை பிரதேசத்தில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக வழைச்சேனைப் பிரிவுக்குப் பொறுப்பான உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் சாம் விஜய ஜயதிலக தெரிவித்தார்.

தேடுதல் நடவடிக்கையின்போது, சந்தேகத்துக்கிடமான வாகனங்கள் உட்பட அந்தப்பிரதேசம் முழுவதும் சோதனை செய்யப்பட்டது எனினும் எவரும் கைதுசெய்யப்படவில்லை.

ஆயினும், உரிமை கோரப்படாத மோட்டார் சைக்கிள் ஒன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. மோட்டார் சைக்கிளின் உரிமையாளரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

வாழைச்சேனைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட பாரிய தேடுதலில், சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் ஈடுபட்டனர்.

# 10000 தொன் கோதுமையை அவுஸ்ரேலியா வழங்கவுள்ளது

இலங்கைக்குப் பத்தாயிரம் மெட்ரிக்தொன் கோதுமை மாவை அவுஸ்ரேலிய அரசாங்கம் 2004 - 2005 ஆம் ஆண்டுக்கான உலக உணவுத் திட்டத்தின் கீழ் வழங்கவுள்ளது.

குறிப்பாக வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்கள் பயன்படுத்துவதற்காகவே இந்தக் கோதுமை மாவை அவுஸ்ரேலியா வழங்குவதாக - நிவாரணம், புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சு தெரிவித்துள்ளது.

கோதுமை மா கையளிக்கும் ஒப்பந்த நிகழ்வு நேற்று இடம்பெற்றது. நிவாரணம், புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சில் இடம்பெற்ற இந்த வைபவத்தில் இலங்கைக்கான அவுஸ்ரேலியத் தூதுவர் கலந்து கொண்டார்.

# பல்கலைக்கழக அனுமதியின்போது மாவட்ட கோட்டா முறைகளை நீக்கவும்

## தேசிய கல்வி ஆலோசனைக்குழு கோரிக்கை

பல்கலைக்கழகங்களில் மாணவர்களை அனுமதிக்கும் தற்போதைய மாவட்ட கோட்டா முறைகளை நீக்க வேண்டுமெனத் தேசிய கல்வி ஆலோசனைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி திறமையடிப்படையில் பல்கலைக்கழகங்களில் சேர்த்துக் கொள்ளும், நாற்பது வீத மாணவர்களை இந்த வருடம் அறுபது வீதமாகவும், 2006 ஆம் ஆண்டு எண்பது வீதமாகவும் அதிகரித்துக் கொள்வதற்கும் ஆலோசனைக் குழு பரிந்துரைத்துள்ளது.

அத்துடன் மாவட்டக் கோட்டா முறையை நீக்குவதுடன், பாடசாலைகளுக்குத் தேவையான வசதிகளை வழங்க வேண்டியதன் அவசியத்தையும், அந்த ஆணைக்குழுவின் அறிக்கை தெரிவிக்கின்றது.

மாவட்டக் கோட்டா முறையை நீக்குவது தொடர்பாகக் கருத்தைத் தெரிவித்த ஆலோசனைக்குழுவின் அதிகாரியொருவர் -

கலைப்பிரிவிலிருந்து பல்கலைக் கழகத்துக்கு இணைத்துக் கொள்ளும் மாணவர்கள் மாவட்டத்தின் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லையெனத் தெரிவித்தார். (தே)

# ஏவுகணைகளை வைத்திருந்த இருவருக்கும் விளக்கமறியல் !

சிலாபத்தில் ஐந்து தன்னியக்கி ஏவுகணைகள் மீட்கப்பட்டமை தொடர்பாகக் கைது செய்யப்பட்ட இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீர்கொழும்பு நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.

இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டிருந்தனர்.

நீர்கொழும்பு வாவியில் வீழ்ந்து விபத்துக்குள்ளான மிக் ரக விமானதிலிருந்த ஐந்து ஏவுகணைகளை குறிப்பிட்ட இருவரும் மீட்டு, தமது வீட்டுவளவில் புதைத்து வைத்தமை தொடர்பாகவே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்த ஏவுகணைகளை - பொலிஸாரிடம் கையளிக்காமல் இவர்கள் புதைத்து வைத்திருந்தனர் என்பதுடன், பொலிஸார் விசாரணைகளை மேற்கொணடு வருகின்றனர். (01)

# பால்மா விலை அதிகரிப்பு தவிர்க்க முடியாததாம்!

(கொழும்பு)

பால்மாக்களின் விலைகள் அதிகரிக்கப்படுவது தவிர்க்க முடியாத ஒன்று என நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதனடிப்படையிலேயே தாம் பால்மாக்களின் விலைகளை நேறறு முன்தினம் நள்ளிரவு முதல் உயர்த்த அனுமதி அளித்ததாக அந்த அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில் அங்கர் 400 கிராம் மாவின் விலை 131 ரூபாவில் இருந்து, 142 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

அங்கர் ஒரு கிலோவின் விலை 323 ரூபா 75 சதத்தில் இருந்து, 347 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

ரத்தி 400 கிராமின் விலை 117 ரூபா 50 சதத்தில் இருந்து, 126 ரூபா 50 சதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

அந்தப் பால்மா ஒரு கிலோவின் விலை 305 ரூபாவில் இருந்து, 333 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

ரெட் கௌ 400 கிராமின் விலை 137 ரூபாவில் இருந்து, 148 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் ரெட் கௌவின் ஒரு கிலோ பொதியின் விலை 335 ரூபாவில் இருந்து, 366 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

நெஸ்பிரே 400 கிராமின் விலை 131 ரூபாவில் இருந்து, 136 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ள அதேநேரம் நெஸ்பிரே ஒரு கிலோவின் விலை 323 ரூபா 70 சதத்தில் இருந்து 332 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (தே)










மிகப்பழமையான விளையாட்டுக்களில் குதிரையேற்றமும் ஒன்று. ஐரோப்பிய சம்பியன் வீரரான பிரான்ஸ் நாட்டின் நிகோலஸ் டாசன்ட் இம்முறை ஒலிம்பிக் குதிரையேற்றத்தில் வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார்.

பெண்களுக்கான ஜிம்னாஸ்டிக் பிரிவில் அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த மோனோட் ரூசோ நிலைதடுமாறி கீழே விழுந்துவிட்டார். இதனால் பதக்க வாய்ப்புப் பறிபோனது.

ஒலிம்பிக் குதிரையேற்ற போட்டியில்தான் இப்படி ஒரு சோகமான சம்பவம் நடந்துவிட்டது. அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த அன்ட்ரூ ஹாய் மின்னல் வேகத்தில் சென்றபோது குதிரை தனது தலை வேகமாக அசைக்க தடாலென்று விழுந்துவிட்டார் ஹாய்.

ஒலிம்பிக் போட்டிகளில் துடிப்போடு வீரர்கள், வீராங்கனைகள் பங்கேற்பதைப் பார்த்திருப்பீர்கள். தொடர்ந்து போட்டிகளையே பார்த்துக் கொண்டிருக்கும் ரசிகர்களுக்கு போரடிக்கும் அல்லவா... அதற்காக ஒலிம்பிக் சின்னங்கள் சண்டையிடுவது போன்று காட்டி ரசிகர்களை குதூகலப்படுத்துகிறார்கள் அமைப்பாளர்கள்.



# ஊக்கமருந்து குற்றச்சாட்டில் இந்திய வீராங்கனை சிக்கினார்

(ஏதென்ஸ்)

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் இந்தியா சார்பில் பங்கேற்ற இரு பளு தூக்கும் வீராங்கனைகள் போதைமருந்து பயன்படுத்தி நாட்டுக்குத் தலைகுனிவை ஏற்படுத்திவிட்டனர்.

மல்லேஸ்வரியுடன் 63 கிலோ எடைப்பிரிவில் பங்கேற்க இருந்தவர் பிரதீமா குமாரி. ஆனால் கடைசி நேரத்தில் அவரது பெயர் பட்டியலில் இல்லை. காயம் காரணமாக அவர் பங்கேற்கவில்லை என்று கூறப்பட்டது.

ஆனால் அது உண்மையில்லை என்று தற்போது தெரியவந்துள்ளது. போதை மருந்து பயன்படுத்தியதால் 7 வீராங்கனைகள் வெளியேற்றப்பட்டனர். அதில் பிரதீமா குமாரியும் ஒருவர். இதை ஏதென்சில் இருக்கும் இந்திய அதிகாரிகள் மூடி மறைத்துவிட்டனர். அவர் கடந்த 16 ஆம் திகதியே நாடு திரும்பிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.



இதற்கிடையே மற்றொரு பளு தூக்கும் வீராங்கனையான சனமாச்சா சானுவும் போதைமருந்து உட்கொண்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவரது சிறுநீர் பரிசோதனை செய்யப்பட்டது. அப்போது போதைமருந்து உட்கொண்டமை சோதனையில் தெரியவந்தது.

சனமாச்சா சானு 53 கிலோ உடல் எடைப்பிரிவில் பங்கேற்று 4 ஆவது இடத்தைப் பிடித்திருந்தார்.

இதேபோல் போட்டியில் பங்கேற்று முதல் வாய்ப்பிலேயே வெளியேறிய மல்லேஸ்வரியும் - ஊக்க மருந்து காரணமாகவே அந்த முடிவை எடுத்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

அவர் ஸ்னாட்ச் பிரிவில் முதல் வாய்ப்பிலேயே 100 கிலோ எடையை முழங்கால் வரை கூட தூக்கமுடியாமல் வெளியேறினார். முதுகு தசைப் பிடிப்பே அவரது முடிவுக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

மேலும் குண்டு எறியும் வீரரான பகதூர் சிங்கும் போதை மருந்து பிரச்சினையில் சிக்கியிருப்பாரோ என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

தகுதிச் சுற்றில் 3 வாய்ப்புக்களிலும் அவர் பவுல் செய்தது சந்தேகத்தைக் கிளப்பியுள்ளது.

சாதாரண போட்டியில் பவுல் செய்யாமல் குண்டு வீசும் பகதூர் பிரசாத் ஒலிம்பிக்கில் 3 வாய்ப்புக்களிலும் பவுல் செய்தது அனைவருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

## மூன்று நாடுகள் பங்கேற்கும்

# கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று ஹொலன்டில் ஆரம்பம்

(அம்ஸ்டர்டாம்)

மூன்று நாடுகள் கிரிக்கெட் போட்டியில் பங்கேற்கவுள்ள இந்திய பந்து வீச்சாளர்களான ஹர்பஜன்சிங் மற்றும் ஆஷிஷ் நெஹ்ரா ஆகியோர் வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் இந்திய கிரிக்கெட் அணிக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. மூன்று நாடுகள் பங்கேற்கும் கிரிக்கெட் போட்டி ஹொலன்டில் இன்று நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் உலக சம்பியனான அவுஸ்ரேலியா, பாகிஸ்தான் மற்றும் இந்தியா ஆகிய மூன்று நாடுகள் கலந்துகொள்கின்றன. சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங் மற்றும் மிதவேகப் பந்துவீச்சாளர் ஆஷிஷ் நெஹ்ரா ஆகியோர் வைரஸ காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் அவர்கள் இருவரும் உட்ரெக்ட் நகரில் நேற்றுமுன்தினம் நடந்த இந்திய அணியின் வலைப் பயிற்சியில் மற்ற வீரர்களுடன் கலந்து கொள்ள முடியவில்லை.

நெஹ்ரா காய்ச்சல் பாதிப்பால் எழுந்திருக்கமுடியாமல் படுத்திருப்பதாகவும், இதனால் அவர் பயிற்சியில் பங்கேற்கவில்லை என்றும், வைத்தியர்கள் அவருக்கு சிகிச்சையளித்து வருவகாகவும், மற்ற வீரர்களும் அவருக்கு உதவி வருகின்றனர் என்றும் அணியின் பிஸியோ அன்ட்ரு லெய்பஸ் தெரிவித்தார்.

என்னுடைய உடலில் சக்தி எதுவும் இல்லை. நான் நிற்பது கூட சிரமமாக உள்ளது என்று சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங் கூறினார்.

அதேநேரம் நட்சத்திர வீரர் வி.வி.எஸ்.லக்ஷ்மனது கால் காயம் குணமடைந்து வருவது குறித்து லெய்பஸ் திருப்தியடைந்திருக்கிறார். அவரது முழங்கால் வீக்கம் குறைந்துவருகிறது. வேகமாக தேறி வருகிறார் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் நடைபெற்ற ஆசிய கிண்ணப் போட்டிகளில் பெரும்பாலான ஆட்டங்களில் லக்ஷ்மன் பங்கேற்கவில்லை. முன்னதாக நடந்த வலைப் பயிற்சியின்போது பந்து அடிக்கடி அவரது இடது முழங்காலில் பதம்பார்த்ததால் அவருக்கு வீக்கம் ஏற்பட்டு பாதிக்கப்பட்டார்.

# இந்திய ஹொக்கி அணி அவுஸ்ரேலியாவிடம் தோற்றது

(ஏதென்ஸ்)

ஏதென்ஸ் ஒலிம்பிக் ஹொக்கியில் இந்தியாவின் அரையிறுதி வாய்ப்பு ஏறக்குறைய தகர்ந்தது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற 'பி' பிரிவுக்கான லீக் ஆட்டத்தில் அவுஸ்ரேலியாவிடம் 4-3 என்ற கோல் கணக்கில் தோற்றுப்போனது இந்தியா.

மைக்கேல் பிரென்னன் ஆட்டத்தின் கடைசி நிமிடத்தில் (70 ஆவது) கோல் அடித்து அவுஸ்ரேலியாவை வெற்றிக்கு அழைத்துச் சென்றார்.

முதல் பாதியில் இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்திருந்தன.

ஆட்டத்தின் 6 ஆவது நிமிடத்தில் தீபக் தாக்கூர் அற்புதமாக அடித்த கோல் மூலம் இந்தியா 1-0 என முன்னிலை பெற்றிருந்தது.

அடுத்த 5 ஆவது நிமிடத்தில் அவுஸ்ரேலியாவின் நட்சத்திர வீரர் டிராய் எல்டர் சமன் செய்துவிட்டார்.

பிற்பாதியில் டேமி டிவையர், மைக்கேல் மெக்கான் ஆகியோர் அடுத்தடுத்து அடித்த கோல்களால் அவுஸ்ரேலியா 3-1 என நல்ல முன்னிலை பெற்றது. அதன் பிறகு ககன் அஜித்சிங்கும், அர்ஜுன் ஹாலப்பாவும் கோல் அடித்து இந்தியாவை சமநிலையில் கொண்டுவந்தனர்.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் நியூஸிலாந்துடன் விளையாடுகிறது இந்தியா.

## அரையிறுதியில் பயஸ் - பூபதி ஜோடி தோல்வி

(ஏதென்ஸ்)

ஒலிம்பிக் ரெனிஸ் அரையிறுதிப் போட்டியில் இந்திய ஜோடி பயஸ்-பூபதி தோல்வியடைந்துவிட்டனர்.

ஆண்கள் இரட்டையர் பிரிவில் இந்தியர்கள் பயஸ் - பூபதியும், ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த நிகோலஸ் கைபெர் - ரெய்னர் ஸ்கட்லரும் மோதினர்.

இதில் 2-6, 3-6 என்ற நேர் செட் கணக்கில் பயஸ் - பூபதி ஜோடி தோல்வியடைந்தது.




## மேற்கிந்தியத் தீவுகளுடனான டெஸ்ட்

# வலுவான நிலையில் இங்கிலாந்து அணி!

(லண்டன்)

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான நான்காவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 7 விக்கெட் இழப்புக்கு 400 ஓட்டங்களைப் பெற்றது.



நேற்றுமுன்தினம் ஆரம்பமான நான்காவது டெஸ்ட் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

முதல் நாள் ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து 5 விக்கெட் இழப்புக்கு 313 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதையடுத்து இரண்டாவது நாளான நேற்று (இச்செய்தி எழுதப்படும் வரை) இங்கிலாந்து 7 விக்கெட் இழப்புக்கு 400 ஓட்டங்களைக் குவித்திருந்தது.



ட்ரஸ்கோதிக் 30, ஸ்ரரஸ் 14, கீ 10, வோகன் 66, பெல் 70, பிளின்ரொப் 72, ஜோன்ஸ் 22 மற்றும் ஜைல்ஸ் ஆட்டமிழக்காமல் 44, ஹோகாட் ஆட்டமிழக்காமல் 36 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர்.

எட்வேட்ஸ், லோசன், பிறாவோ ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கொலின்மோர் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இரண்டாவது நாளில் 111.5 ஓவர்கள் நிறைவில் இங்கிலாந்து அணி 7 விக்கெட் இழப்புக்கு 400 ஓட்டங்களுடன் விளையாடிக்கொண்டிருக்கிறது.




ஆண்களுக்கான படகு வலித்தல் பிரிவில் அரையிறுதிப் போட்டியில் நடந்த சோகம் கொடுமையானது. தென்னாபிரிக்காவின் டோனாவன் செக் (இடது), ரேமன் டி கிளமென்ட் ஜோடி முன்னேறிக் கொண்டிருந்த போது கனடா அணியின் படகு இவர்களின் படகு மீது மோதியது.

இந்தச் செய்கையால் கனடா அணி தகுதியிழக்க, தென்னாபிரிக்கா வெண்கலத்தோடு திருப்தியடைய வேண்டியதாயிற்று. இந்தச் சோகத்தில்தான் டோனாவன் வெறுத்துப் போய் படகில் படுத்துவிட்டார்.




பெண்களுக்கான குண்டுஎறிதல் பிரிவில் பங்கேற்ற கியூப நாட்டு வீராங்கனை யுமெலோடி கும்பா

குருவிக் குஞ்சுகளை சென்றடைய வழிகாட்டுங்கள்



## ஜோசப் லிஸ்டர்



மருத்துவர் ஜோசப் லிஸ்டர் (1827-1912) பலத்த காயத்துக்குச் சிகிச்சை அளிக்கும் காட்சி. இவரது அறுவை சிகிச்சை முறைகள் மருத்துவத்தில் புதுமையை ஏற்படுத்தின.

## My Pet

I have a pet dog.
It's name is Jimmy.
It's black in colour.
It has two small eyes and a tine black nose.
It has a small bushy tail.
He has white sports on his body.

சி.நிறோஜன்
தரம் - 4, யாழ்ப்பாணக் கல்லூரி.

## சித்திரக் கதை

### ஆமைகளும் கரடியும்



அகப்பட்டுக் கொண்டீர்களா? என்று சொன்னது கரடி.



ஆமைகள் எழுந்து நட்புடன் தம்மை அணைத்தார்கள்.



பாய்ந்து உருண்டோடினார்கள்.



தொப்பென்று நீரில் விழுந்தார்கள். ஏமாந்தது கரடி.

## ஓவியப்போட்டி முடிவுத் திகதி 10.09.2004

## ஓவியப்போட்டி

சிறுவர்களே உங்கள் ஓவியங்களுக்குப் பரிசுதர எண்ணியுள்ளோம். உங்கள் கைவண்ணங்களை இன்னும் மெருகுடன் வரைநது அனுப்புங்கள். இந்த ஓவியப்போட்டியில் பல விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அதாவது, ஆண்டு 1-11 வரையான மாணவர்கள் இதில் பங்குபற்றலாம்.

நீங்கள் வரையும் ஓவியத்தில் நீர்வர்ணம், எண்ணெய் வர்ணம், கலர்ப் பென்சில் போன்றன பயன்படுத்தலாம்.

வெள்ளைத்தாளில் ஓவியத்தினை வரைந்து அனுப்பவும். அனுப்பும் ஓவியத்தின் தாளினை மடிக்காமல் அனுப்பவும். தட்டச் சுத்தாளின் (A4) இல் அமையவேண்டும். நீங்கள் வரைந்த ஓவியஙகளை கீழ்வரும் கூப்பனைப் பூர்த்திசெய்து, அதனுடன் இணைத்து அனுப்பிவையுங்கள்.

தேர்ந்தெடுக்கப்படும் ஓவியங்கள் 3 இற்குப் பரிசுகள் வழங்கப்படும். அத்தோடு, 10 ஆறுதல் பரிசுகளும் உண்டு. நீங்கள் அனுப்பும் ஓவியங்களில் பரிசுக்குரிய ஓவியங்கள் - இளந்தேனீக்கள் கழகத்தினரால் நடாத்தப்படும் கண்காட்சியில் பார்வைக்காக வைக்கப்படும்.

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................

.............................. ........ ..................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் திகதி மாணவர் ஒப்பம்

ஓவியப்போட்டி
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

இங்கே மடிக்கவும்



**சிந்தனைக்கு!**
எம்மைக் கெடுக்கும் அகங்காரம், அதீதி, புறங்கூறுதல் போன்றவை எம்முடைய சிந்தையில் நுழைந்து விடாமல் விழிப்புடன் வாழவேண்டும்.



# சிறுவர் அரங்கம்



(சென்றவாரத் தொடர்ச்சி...)

நான் சொன்னதை எல்லாம் கவனமாகக் கேட்ட சேவல் அண்ணன் - ஜிம்மித் தம்பி நீ சொல்வது மிகவும் சரியே. கறுப்பனின் காட்டுக் கத்தல் உனது தூக்கத்தை மட்டுமல்ல, அருமையான எனது குஞ்சுகளின் நித்திரையையும் பல முறை குழப்பியுள்ளது.

அவனைப் பார்த்தால், எனது கோபத்தையும் மறவாமல் அவனிடம் சொல்லி விடு என்று சொன்னார். சேவல் அண்ணா - உங்களது முறைப்பாட்டை நிச்சயமாக அவனிடம் சொல்லுகிறேன் என்று சேவல் அண்ணனிடம் சொல்லிவிட்டு, வாசல் படியில் போய் அமர்ந்து கொண்டேன்.

## ஜிம்மி

சிலநிமிடங்கள் கழிந்தன.

கறுப்பனின் மியாவ் மியாவ் என்ற குரல் நான் அமர்ந்திருந்த இடத்துக்கு மிகவும் அண்மையில் கேட்டது.

ஆவேசத்தோடு எழுந்து ஓடி, கறுப்பனைத் தேடினேன். என்ன ஆச்சரியம் இது? குரல் மட்டும் கேட்கிறது ஆளைக் காணவில்லையே. அடேய் கறுப்பா நீ எங்கிருக்கிறாய்? என்று ஆத்திரத்தோடு கத்தினேன்.



பதில் எதுவும் இல்லை. சிறிது நேர அமைதிக்குப் பின்னர் மீண்டும் அவனது கடூரமான மியாவ் என்ற சத்தம் காதைப் பிளக்கச் செய்வதுபோல ஓங்கி ஒலித்தது. சத்தம் இப்போது படிக்கட்டுக்குள்ளிருந்து வருவது போலல்லவா இருக்கிறது.

கறுப்பனை இன்றைக்கு எப்படியாவது பிடித்திட வேண்டும் என்ற கோபத்தில் - சரசரவென்று படிக்கட்டின் அருகே பள்ளம் ஒன்றைத் தோண்டத் தொடங்கினேன்.



எனக்கிருந்த கோபத்தில் எனது உயரத்தை விட அதிகமான அளவு ஆழத்தில் ஒரு பள்ளத்தை வாசல் படியினருகே விரைவாகத் தோண்டி முடித்து விட்டேன்.

அந்த நேரத்தில் ஜிம்மி உனது முட்டாள் தனமான வேலையை உடனடியாக நிறுத்து என்றதொரு கீச்சுக் குரல் என்னைத் திடுக்கிடச் செய்தது.

சத்தம் வந்த திசையிலே திகிலோடு திரும்பிப் பார்த்தேன். அங்கே சுண்டெலியார் ஒருவர் கோபத்தோடு நின்றிருந்தார்.



ஜிம்மி எனது சின்னஞ்சிறிய வளை வீட்டினருகே இவ்வளவு பெரிய பள்ளம் ஒன்றைத் தோண்டி, எதற்காக என்னையும், எனதருமைக் குட்டிகளையும் தொந்தரவு செய்கிறாயோ? என்று சுண்டெலியார் என்னைப் பார்த்துப் பரிதாபமாகக் கேட்டார்.

சுண்டெலியாரிடம் எங்கள் வீட்டில் வாழும் கறுப்பனின் குறும்புத்தனத்தைப் பற்றிச் சொல்லி, அவனைத் தேடிக் கண்டு பிடிப்பதற்காகவே இவ்வளவு பெரியதொரு பள்ளத்தை அவரது வளை வீட்டினருகே நான் தோண்டினேன் என்பதை விளக்கமாக எடுத்துச் சொன்னேன்.

கறுப்பனைப் பற்றி நான் சொல்லியது கேட்ட சுண்டெலியாரது குட்டி - உடல் வெடுவெடு என நடுங்கியது.

கலக்கத்தோடு என்னைப் பார்த்த சுண்டெலியார் - ஜிம்மி பொல்லாதவனாகிய அந்தக் கறுப்பனை உட னடியாக வீட்டை விட்டுத் துரத்தியாக வேண்டும்.

படுபாதகனான அவன் - என்னையும், எனது குட்டிகளையும் கொன்று தின்றே தீருவேன் எனச் சபதம் செய்துள்ளான் என்று கவலையோடு சொன்னார்.

சுண்டெலியாரே நீர் எதற்கும் கவலைப்படாதேயும். அவனால் உமக்கு ஏதாவது ஆபத்து வருமானால் ஜிம்மி என்று குரல் கொடுத்து என்னைக் கூப்பிடும். ஓடிவந்து உமக்கு நான் உதவி செய்வேன் என்று அவருக்கு நான் ஆறுதல் சொன்னேன்.

சரியென்று சொல்லித் தலையாட்டிய சுண்டெலியார் - எனக்கு நன்றி சொல்லிவிட்டுக் குடுகுடுவென்று ஓடிச்சென்று தனது வளை வீட்டுக்குள் புகுந்துகொண்டார்.

கஷ்டப்பட்டுத் தோண்டிய பள்ளத்தை மீண்டும் மண்போட்டு மூடினேன். ஆழமான அந்தப் பள்ளத்தால் சுண்டெலியாருக்கும், வீட்டில் வசிக்கும் சிறு குழந்தைகளுக்கும் ஆபத்து வந்துவிடக் கூடாதல்லவா.

பார் இந்தப் பொல்லாத கறுப்பனால் எனக்கு மட்டுமல்ல, எல்லாருக்குமே தொல்லைதான் என்று கோசித்துக்கொண்டு தோட்டப் பக்கமாக நடந்து சென்றேன்.

**யோ.சத்யன்**

- தொடரும்...

# எனது பாடசாலை

எனது பாடசாலை இணுவில் மத்தியிலுள்ள இணுவில் மத்திய கல்லூரி ஆகும்.

இந்தப் பாடசாலையில் ஆண்டு ஒன்றுமுதல் ஆண்டு பதின்மூன்று வரை வகுப்புக்கள் உண்டு. இங்கு 63 ஆசிரியர்களும் 1500 மாணவர்களும் கல்வி கற்கின்றனர்.

நன்றாக வளர்ச்சியடையும் எனது பாடசாலை நாட்டுக்குச் சேவைபுரியும் நல்ல மனிதர்களை உருவாக்க வேண்டும்.

ச.அருள்பவன்
இணுவில் மத்திய கல்லூரி

# உங்கள் கைவண்ணம்



ம.பார்த்திபன்
தரம் -9, மத்திய கல்லூரி



வ.சுஜீத்தா
வதிரி திருஇருதயக் கல்லூரி.

# கடல் ஆமைகள்

பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கடல் ஆமைகள் வாழ்ந்து வருகின்றன. டைனோஸர்களுக்கு முன்னரே பூமியில் தோன்றியவை. எட்டு வகையான கடல் ஆமைகள் உலகத்தில் காணப்படுகின்றன. இவற்றில் ஐந்து வகை ஆமைகள் இந்தியக் கடல் பகுதிகளில் வாழ்கின்றன.



கடல் ஆமைகள் - ஊர்வன வகையைச் சேர்ந்தவை. சூழ்நிலைக்கு ஏற்ப அவை தமது உடல் வெப்பத்தை மாற்றி அமைத்துக் கொள்ளும். உடல் வெப்பத்தை சீராக்கவும், சுவாசிப்பதற்கும் கடலின் மேல் மட்டத்துக்கு வந்துசெல்லும். நிலத்தில் வாழும் ஆமை தன்னுடைய தலை, கால்களை ஆடித்து வரும்போது ஓட்டுக்குள் இழுத்துக்கொண்டு தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும். ஆனால், கடல் ஆமைகளால் இவ்வாறு செய்யமுடியாது.

கடல் ஆமைகளுக்குப் பற்கள் இல்லை. தாடைகளின் உதவியுடன் உண்ணும். மிகக் குறைந்த தூரத்தை மட்டுமே இவற்றால் பார்க்கமுடியும். ஆனால், நுகரும் திறன் இவற்றுக்கு மிகவும் அதிகம். கடல் ஆமைகளின் முக்கிய உணவு நத்தைகள், ஜெலி மீன், சிப்பி போன்றவை. இவை நத்தை போன்ற உறுதியான ஓடுகளையுடைய உயிரினங்களை உட்கொள்வதற்கு ஏற்றவாறான வாயமைப்புடன் இருக்கும்.

ஒரு ஆமை 50 இலிருந்து 200 முட்டைகள் வரை இட்டாலும், சில முட்டைகளே பொரிக்கும். முட்டை பொரித்த பின்னர் (60-85 நாட்களில்) ஆமைக்குட்டிகள் இரவில் கடலுக்குள் சென்றுவிடும். பெண் ஆமைகள் முட்டையிட நிலத்துக்கு வரும். இதற்காக சில வேளைகளில் ஆயிரக்கணக்கான மைல்கள்கூட நீந்தி வரும். ஆனால், ஆண் ஆமைகள் ஒரு முறை கடலுக்குச் சென்றுவிட்டால், வாழ்க்கை முழுவதும் கடலுக்குள்தான் கழிக்கும். கடல் ஆமைகளில் மிகச் சிறியது சிற்றாமை. வளர்ந்த சிற்றாமையின் எடை சுமார் ஐம்பது கிலோ கிராம். 80 சென்ரிமீற்றர் வரை வளரும். பெரிய ஆமைகளின் எடை ஏறக்குறைய 250-400 கிலோகிராம் ஆகும்.

# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?
அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

5இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

# இளந்தேனீக்கள் கழகம்

## விண்ணப்பம்

முழுப் பெயர் :........................................
கற்கும் பாடசாலை :........................................
கற்கும் தரம் :........................................
வீட்டு முகவரி :........................................
பிறந்த திகதி :........................................
ஆர்வமுள்ள துறைகள் :........................................
:........................................

............... ...............
திகதி ஒப்பம்

............... ...............
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

— இங்கே மடிக்கவும் —



# அன்புள்ள சிறுவர்களே!

எந்த ஒரு வேலையாக இருந்தாலும் அதை நேர்த்தியாகவும், விரைவாகவும் செய்து முடிக்கத் தேவைப்படுவது ஒருமுனைப்பு. சிதறிக்கிடக்கும் எண்ணங்களை எல்லாம் ஒரு புள்ளிக்கு ஒரேயொரு கருத்துக்குக் கொண்டு வருவதே ஒருமுனைப்பு. ஒருவரின் வெற்றி அவரது மன ஒருமுனைப்பில்தான் தங்கியுள்ளது.

அதனால், நீங்கள் எந்த ஒரு வேலையிலோ அல்லது படிப்பிலோ ஈடுபட்டிருந்தாலும் அதைப்பற்றி மட்டுமே நினைக்க வேண்டும். அந்த ஒன்றில் பூரண கவனத்தைச் செலுத்தக் கூடியவர்கள் - அவர்களுடைய எல்லா முயற்சிகளிலும் வெற்றி பெறுவார்கள். வேகமாக முன்னேறுவார்கள்.

மன ஒருமுனைப்பு என்பது ஆரம்பத்தில் சிறிது கஷ்டமாகத்தான் இருக்கும். ஆனால், வெற்றிக்குப் பங்களிக்கும் பல விடயங்களில் முதன்மையானது மன ஒருமுனைப்பு. உங்களுடைய மன ஒருமுனைப்பாட்டை மேலும் விருத்தி செய்வதற்கு நாலு வகையான விடயங்கள் தரப்படுகிறது. பயிற்சி செய்து பாருங்கள்.

- நீங்கள் ஈடுபடும் எந்த விடயமானாலும் விருப்பத்துடன் அதில் ஈடுபடுங்கள்.
- ஒரு நேரத்தில் ஒரு விடயத்தில் மட்டுமே ஈடுபடுங்கள். இரண்டு, மூன்று விடயங்களில் கவனம் செலுத்த வேண்டாம். படிககும்போது விளையாட்டைப் பற்றி சிந்திக்காமல், படிப் பில் கவனம் செலுத்துங்கள். விளையாடும் பொழுது விளையாட்டில் கவனம் செலுத்துங்கள்.
- ஒரு விடயத்தில் ஈடுபடும்பொழுது வேறு எந்தக் கவலையோ, பதட்டமோ இல்லாமல் இருக்க வேண்டும்.
- அவசரப்படாமல், ஆறுதலாக அந்த விடயத்தில் ஈடுபடுங்கள்.

இந்த விடுமுறை காலத்தில், இந்தப் பயிற்சியை முயன்று பாருங்கள். விடுமுறை முடிந்து பாடசாலை செல்லும்போது உங்களால் பாடங்களில் முழுக்கவனம் செலுத்தக் கூடியதாக இருக்கும்.

பாசமுடன் - சாரு அக்கா

# சென்றவார புதிர் விடைகள்

1. 6 பொம்மைகளின் விலை ரூபா 18. ஒரு பொம்மையின் விலை ரூபா 3. அவர் கேட்க வேண்டிய விலை ரூபா 2 அல்லது ரூபா 1 ஆகும்.
2. கொண்டுசென்றது ரூபா 11. தேவைப்பட்டது ரூபா 1. 3 பொம்மைகளின் விலை ரூபா 12. ஆகவே ஒரு பொம்மையின் விலை ரூபா 4.
3. ஒரு பொம்மையின் விலை ரூபா 2.
மூன்று மடங்கு 2x3 = ரூபா 6
ரூபா 6 - ரூபா 4 = ரூபா 2
ஒரு பொம்மையின் விலை ரூபா 2.

# விடுகதைகள்

1. அழகழகாய் பூ பூக்கும், அம்மாடி என்று காய் காய்க்கும். அது என்ன?
2. அள்ளலாம், கிள்ள முடியாது. அது என்ன?
3. அவனுக்கு ஒரு முறை பல்லு விழுந்தால், முளைக்காது. அவன் யார்?
4. அடிக்காத பிள்ளை அலறுது. அது என்ன?
5. அச்சு இல்லாத சக்கரம், அழகு காட்டும் சக்கரம். அது என்ன?

விடைகள்
1.நொச்சி 2.தண்ணீர் 3.சீப்பு 4.சங்கு 5.வளையல்

கா.செந்தூரன், தரம் - 04
சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை

# ஒலிம்பிக்



(சென்றவாரத் தொடர்ச்சி...)

மன்னர்கள் ஆட்சிக்காலம் என்றாலே தவிர்க்க முடியாத ஒரு விடயம் போர். கிரேக்க நகரங்களுக்கிடையே அந்தக் காலத்தில் அடிக்கடி போர் நடக்கும். (குறுநில மன்னர்கள் அடிக்கடி சண்டையிட்டுக் கொண்டது போல) ஒரு நகரத்தின் மீது மற்றொரு நகரம் படையெடுப்பதும், சண்டைபிடிப்பதும் மிகவும் சாதாரணம். ஒலிம்பிக் போட்டி நடந்து கொண்டிருக்கும் போது, இப்படிப் படையெடுப்பு நடைபெற்றால், போட்டிகளை நடத்த முடியாது. ஆகவே, ஒலிம்பிக் போட்டிகள் தொடங்குவதற்கு முன்னதாக கிரேக்க நகரங்களுக்கிடையே ஒரு சண்டை நிறுத்த ஒப்பந்தம் அவசர அவசரமாக அமுலுக்கு வரும். போட்டிகள் தொடங்கி முடியும்வரை யாரும் - யார் மீதும் படையெடுக்கவோ, சண்டைபிடிக்கவோ கூடாது. மீறி யாராவது படையெடுத்தால், அந்த நகரத்துக்கு மற்ற நகரங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து மிகக் கடுமையான அபராதம் விதிக்கும். அதைவிட, ஒலிம்பிக்கில் பங்கேற்க அந்த நகரத்தைச் சேர்ந்தவர்களுக்கு அனுமதி மறுக்கப்படும். இப்படித்தான் தொடங்கியது ஒலிம்பிக் போட்டிகள்.



சீரும் சிறப்புமாக நான்காண்டுகளுக்கு ஒரு முறை கிரேக்கர்களால் கொண்டாடப்பட்ட ஒலிம்பிக் போட்டிகளுக்கு ரோமாபுரி சாம்ராஜ்ஜியத்தின் வடிவத்தில் பிரச்சினை வந்தது.

ரோமானியர்களின் படையெடுப்புக்குப் பிறகு, ஒலிம்பிக் போட்டிகள் அதன் சிறப்பை இழந்தன. ஒலிம்பிக் போட்டிகளில் மன்னர், அதிகாரவர்க்கத்தின் தலையீடுகள் அதிகமாக ... முறைகேடுகள் அதிகரித்தன.

ரோமானியச் சக்கரவர்த்தி கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய பிறகு, ஒலிம்பிக் போட்டி முற்றாகப் புறக்கணிக்கப்பட்டது. மாற்றுச் சமயத்தினர் கொண்டாடும் விளையாட்டுப் போட்டி என்று ஒதுக்கப்பட்டது ஒலிம்பிக்.

கிரேக்க கலைஞர்களால் இரசித்து, இரசித்து உருவாக்கப்பட்ட ஒலிம்பிக் போட்டிகள் - அதன் மதிப்பை இழந்து, புகழ் மங்கி கி.பி 393 ஆம் ஆண்டில் ஒரேயடியாக ஒலிம்பிக் போட்டிகளுக்குத் தடை விதித்தார் ரோமானியப் பேரரசர் முதலாம் தியோடோசியஸ்.

பின்னர் அரசாண்ட அவரது மகன் இரண்டாம் தியோடோசியஸ் இன்னும் ஒருபடி மேலே போய், ஒலிம்பியா நகரில் இருந்த ஒலிம்பிக் அரங்கங்கள், கட்டடங்களை இடித்துத் தரைமட்டமாக்கினர். கிறிஸ்து பிறப்பதற்கு முன் பிறந்த ஒலிம்பிக் வரலாறு, கிறிஸ்து பிறந்த 393 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு முடிவுக்கு வந்தது. அதன்பின்னர் உலகம் ஏறக்குறைய ஒலிம்பிக் பற்றி மறந்துவிட்டது.

ஆனால், பற்பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு 1875 ஆம் ஆண்டில் ஒலிம்பியா பகுதியில் ஒரு அகழ்வாராய்ச்சி நடத்தப்பட்டது. உலக வரலாற்றுக்கு அது ஒரு திருப்புமுனை. (தொடரும்...)

# வெண்புறா நிறுவனம் நடத்தும் கட்டுரை, சித்திரப் போட்டிகள்

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம், கண்ணிவெடி தொடர்பான கட்டுரை, சித்திரப் போட்டிகளை நடத்தவுள்ளது.

கட்டுரை எழுதுவோர் கண்ணிவெடி நடவடிக்கையில், ஈடுபடும் நிறுவனங்களின் சமூகத்துக்கான பங்களிப்பு, எமது சமூகத்தில் கண்ணிவெடி அபாயக் கல்வியின் முக்கியத்துவம், கண்ணிவெடி களற்ற எதிர்காலத்தை உருவாக்க மக்களின் பங்களிப்பு என்ற தலைப்புக்களில் ஏதாவது ஒரு தலைப்பில் 700 - 800 சொற்களுக்கு குறையாது எழுதப்படவேண்டும்.

சித்திரம் வரைவோர் கண்ணிவெடிகளில் இருந்து எம்மையும், எமது சமூகத்தையும் பாதுகாப்போம் எனும் கருப்பொருளை வெளிப்படுத்தும் வகையில் வரையப்பட வேண்டும். இந்தப் போட்டிகளில் யாழ். மாவட்டத்தில் வசிக்கும் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவரும் பங்குபற்றலாம்.

ஆக்கங்கள் செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்பாக, வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம், இல. 63 பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

## இடம்பெயர்ந்த பெண்கள் குரல்

இராணுவ ஆக்கிரமிப்பால், சொந்த இடம் விட்டு, இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள பெண்களின் 'மன எண்ணங்களைப் பகிர்ந்துகொண்டு, எதிர்காலம் பற்றித் திட்டமிடும் அரங்கு' நாளை காலை 9.30 மணி முதல் 4மணிவரை பெண்கள் பண்பாட்டு மையத்தில் நடைபெறவுள்ளது.

நலன்புரி முகாம்களில் வாழும் மக்களின் பிரதிநிதியாகப் பெண்கள் பங்குகொள்ளும் இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதனும் கலந்துகொள்வார்.

இந்த நிகழ்வில் இடம்பெயர்ந்து வாழும் ஆர்வமுள்ள பெண்களும் கலந்துகொள்ளமுடியும்.

# கத்தோலிக்க எழுத்தாளர் சங்கம் நடத்தும் ஆக்கப் போட்டிகள்

தேசிய கத்தோலிக்க எழுத்தாளர் சங்கமானது ஆக்க கர்த்தாக்களை ஊக்குவிக்கும் முகமாக சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம் போன்ற போட்டி ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

சிறுகதையானது 1000 - 1200 சொற்களுக்குள் அமைய வேண்டும் என்றும், இதற்கு வயதெல்லை கிடையாது எனவும் அறிவித்துள்ளது.

கவிதை, கட்டுரை, ஓவியம் போன்ற போட்டிகள் பாடசாலை மாணவர்களுக்கானவை. கவிதைகள் 30 வரிக்கு மேற்படாமலும், கட்டுரைகள் 500 சொற்களுள் அடங்குவதாகவும் இருப்பதுடன், ஓவியங்கள் எ4 தாளில் வரையப்பட்டதாகவும் இருக்க வேண்டும்.

பாடசாலை மாணவர்களது ஆக்கங்கள் யாவும் அதிபரது அத்தாட்சியுடன் அனுப்பப்படுதல் வேண்டும். ஆக்கங்கள் யாவும் செப்ரெம்பர் 30ஆம் திகதிக்கு முன்பாக பொதுச் செயலாளர், தேசிய கத்தோலிக்க எழுத்தாளர் சங்கம், ஆறாவது பவுல் நிலையம், 24 பூந்தோட்ட வீதி, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆக்கம் தொடர்பாகவும் தெரிவு செய்யப்படும் முதல் மூவருக்கு சான்றிதழ்கள் வழங்கப் படவுள்ளன. (31)

# திக்கம் வடிசாலைக்கு நூறு வீத வரி விலக்களிக்க வேண்டுகோள்

## சிவநேசன் எம்.பி. விடுத்துள்ளார்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள திக்கம் வடிசாலைக்கு நூறுவீத வரி விலக்களிக்குமாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசன் நிதி அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த புதன்கிழமை நாடாளுமன்றக் கட்டடத்தினுள் நிதி அமைச்சர் சரத் அமுனுகமவைச் சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர் யாழ். மாவட்ட பனை, தென்னைவள கூட்டுறவு அபிவிருத்திச் சங்க மேம்பாட்டுக்கான நடவடிக்கைகள் குறித்து பேசியபோதே அவர் இந்த வேண்டுகோளைவிடுத்தார்.

அங்கு நிதி அமைச்சரிடம் அவர் தெரிவித்திருப்பதாவது-

யாழ். மாவட்டத்தில் உள்ள மதுபானசாலைகளுக்கு அனுமதிப்பத்திர நடவடிக்கைகள் மிக நீண்டகாலமாக நடைபெறவில்லை. இதனால், பல மதுபான விற்பனையாளர்கள் பல சிரமங்களையும், பொலிஸாரின் கெடுபிடிகளையும் சந்திக்க நேரிடுகின்றது. 2000ஆம் ஆண்டுக்குப்பின் இந்த அனுமதிப்பத்திரம் வழங்கும் நடைமுறை பின்பற்றப்படவில்லை. இதனைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கைகள் உடன் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும்.

பனை, தென்னைவள அபிவிருத்திக்கான நடவடிக்கைகளை அரசு உடன் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்க வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

இந்தக் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் நிதி அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

இது குறித்துத் தான் பரிசீலித்து முடிவு கூறுவதாக சரத் அமுனுகம அவரிடம் தெரிவித்தார். (ப)

# ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கு மருந்துகள் விநியோகிக்கப்பட்டன

(யாழப்பாணம்)

நல்லூர்ப் பிரதேச சபையின் கீழ் இயங்கும் ஆயுர் வேதவைத்திய சாலைகளுக்கு, சித்த ஆயுர்வேத மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மருந்துக் கூட்டுத்தாபனத்திலிருந்து நல்லூர்ப் பிரதேசசபையினரால் கொள்வனவு செய்யப்பட்ட ஒரு லட்சம் பெறுமதியான சித்த ஆயுர்வேத மருந்துகள் நல்லூர்ப் பிரதேச சபையின் கீழ் இயங்கும் கொக்குவில், நல்லூர், கோண்டாவில் பகுதிகளில் இயங்கும் சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் இந்த வைத்தியசாலைகளில் பல நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க முடியும் எனவும், நல்லூர்ப் பிரதேசசபைச் செயலாளர் வைரமுத்து தெரிவித்தார். (கு)





கந்தர்மடம் ஞானஜோதி சனசமூக நிலைய பாலர் பாடசாலை மாணவர்களின் விளையாட்டு நிகழ்வில் மாநகர சபை சனசமூக நிலைய மேற்பார்வையாளர் சோமசுந்தரம் மங்கள விளக்கேற்றுவதையும், நிலையக்கொடியை தலைவர் டெனிஸும், பாடசாலைக் கொடியை ஆசிரியை சிவநாகநந்தின ஏற்றுவதையும் காணலாம். (44)

# பண்ணை, அல்லைப்பிட்டி பகுதிகளில் கடற்படையினர் சோதனைகள் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதிகளுக்கு செல்லும் மற்றும் தீவுப்பகுதிகளில் இருந்து வரும் வாகனங்கள், பண்ணை, அல்லைப்பிட்டி சோதனைச் சாவடிகளில் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

பஸ்ஸில் பயணிக்கும் பயணிகள் இறக்கப்பட்டு, அவர்கள் கொண்டு வரும் பொதிகளும், அடையாள அட்டைகளும், சோதனையிடப்படுகின்றன. இதனால், பெருமளவு நேரத்தை இதில் செலவிடவேண்டியுள்ளதாக வாகன சாரதிகளும், பயணிகளும் விசனம் தெரிவிக்கின்றனர். (99)

## விசேட தேவைக்குரியவர்களுக்கு பொருட்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் "விசேட தேவைக்குரியவர்"களுக்கான உலர் உணவு அல்லாத நிவாரணப் பொருட்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

யு.என்.எச்.சீ.ஆர். நிறுவனத்தின் ஏற்பாட்டில் இதுவரை பொருட்களைப் பெறாத விசேட தேவைக்குரியவர்களுக்கு என பாய், தலையணை, நுளம்புவலை உள்ளிட்ட பொருட்கள் வழங்கப்படவுள்ளதாக யாழ். பிரதேச செயலகத்தினர் தெரிவித்தனர்.

# திருத்தப்படாத நிலையில் கச்சேரி முன் ஒழுங்கை

யாழ். செயலகத்துக்கு அருகில் உள்ள கச்சேரி ஒழுங்கை குன்றுங் குழியுமாகக் காணப்படுவதால், அந்தப் பகுதியூடாக போக்குவரத்துச் செய்வோர் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்த வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாத நிலையில் போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் காணப்படுவதாகவும், சம்பந்தப்பட்டவர்களுக்கு, இந்த வீதியிலுள்ள மக்கள் அனைவரும் கையொப்பம் இட்ட கடிதம் அனுப்பியும் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை.

மழைகாலம் வந்தால் இந்த வீதியில் நீர்தேங்கி நின்று, அதன் மூலம் மேலும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டிவரும் எனவும் அந்தப் பகுதி தெரிவித்தனர். (சீ)

# சின்னஞ் சிறு செய்திகள்

## ஆசிரிய கலாசாலை இறுதிப் பரீட்சை

(பலாலி)

பலாலி ஆசிரிய கலாசாலை மாணவர்களுக்கான வருட இறுதிப்பரீட்சைகள் இன்று ஆரம்பமாகவுள்ளன.

இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சை இன்று ஆரம்பமாகித் தொடர்ந்து 28ஆம் திகதிவரை நடைபெறும்.

முதலாம் வருட ஆசிரிய மாணவர்களுக்கான இறுதிப்பரீட்சை எதிர்வரும் 30ஆம், 31ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளது.

## வீடியோ படக்காட்சி

யாழ். பல்கலைக்கழக திரைப் படவட்டம் வழங்கிவரும் திரைப் படக் காட்சித் தொடரில் 'பீற்றர்வெபர்' இன் நெறியாள்கையில் உருவான 'முத்துக் காதணி அணிந்த பெண்' எனும் ஆங்கில மொழிப்படம் நாளை காலை 10 மணிக்கு புவியியற் துறை மண்டபத்தில் காண்பிக்கப் படும். இந்தப் படம் புகழ்பெற்ற டச்சு ஓவியர் வெர்மீரின் படைப்புச் சூழலை பின்புலமாகக் கொண்ட தாகும்.

இந்த நிகழ்வுடன், இணைவாகப் புகழ்பெற்ற வங்காள ஓவியர் ஜாமினிராய் பற்றிய விபரணப்படமும் காண்பிக்கப்படும்.

படக்காட்சியின் இறுதியில் எழுத்தாளர் அ.யேசுராசாவின் தலைமையின் கீழ் காண்பித்த படங்கள் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறும்.

## செஞ்சிலுவைச் சங்கக் கூட்டம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக் கிளையின் ஆளுநர் சபை கூட்டம் இன்று முற்பகல் 11 மணிக்கு கிளையின் தலைவர் வைத்திய கலாநிதி வை.[illegible] தலைமையில் நடைபெறவுள்ளது. (64)

## கோப்பாய் - மானிப்பாய் வீதியில், விபத்துக்கள் பெருமளவில் அதிகரிப்பு

(சுதுமலை)

கோப்பாய் - மானிப்பாய் வீதியில் மருதனார்மடம் சந்தியில் இருந்து உரும்பிராய் வரையான வீதியில் அண்மைக்காலமாக விபத்துக்கள் இடம்பெற்று வருகிறது.

வீதியின் இருபக்கமும் செடி கொடிகள் வளர்ந்துள்ளதுடன், வீதியோரங்களில் பள்ளங்களுமுள்ளமையால் இலகுவாக போக்குவரத்தை மேற்கொள்ள முடியாது பாதசாரிகள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (91)

## தெய்வீகப் பேருரை

வடமராட்சி ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆசிரமத்தின் மஹோற்சவகால விசேட நிகழ்வாக இடம்பெறும் தெய்வீகக் கலை நிகழ்ச்சிகள் தொடரில் இன்று காலை 10 மணிக்கு 'ஆன்மீகக் கருத்துரைகள்' பற்றி இலங்கை சின்மயா மிஷனின் வதிவிட ஆச்சாரியார் பிரமாச்சாரி ரமண சைதன்யா சொற்பொழிவாற்றவுள்ளார். (20)

# யாழ். பல்கலைக்கழக விசாரணையாளர் குழுவை சீர்செய்யுமாறு கோரிக்கை

யாழ். பல்கலைக்கழக ஒழுக்காற்று விசாரணையாளர்களுக்கான, குழுமத்தை தேர்ந்தெடுக்கும்போது, தொழில் வாழ்விலும், பொது வாழ்விலும், சட்டம், ஒழுங்கைப் பேணி நடப்பவர்களையும், நேர்மையான நடத்தை உடையவர்களையுமே தேர்ந்தெடுத்தல் வேண்டுமென யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் துணைவேந்தரிடம் கடித மூலம் வேண்டு கோள்விடுத்துள்ளது.

இது குறித்து அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

அரச பொது நிறுவனங்களில் பணியாற்றியவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது, அவர்களின் பணிக் காலத்தின் நடத்தைகள் பரிசீலிக்கப்படவேண்டும். குற்றச்சாட்டுக்கு இலக்கானவர்களுக்கும், தண்டனைக்குட்படுத்தப்பட்டவர்களும் இந்தக் குழுமத்துக்குத் தேர்தெடுக்கப்படுவதைத் தவிர்க்க வேண்டும். இதுபற்றி ஒழுககாற்றுக் கோவையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், எமது பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற தெரிவின்போது இந்த நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படாதது தவறானதும், கண்டனத்துக்குரியதுமாகும்.

தயவு செய்து உரியவகையில் விசாரணைக் குழுமத்தைச் சீர் செய்யுமாறு பணிவுடன் வேண்டுகிறோம் என, அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு

# சண்முகநாதனை அதிபராக மீண்டும் நியமிப்பதற்கு முயற்சி

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் சண்முகநாதனை மீண்டும் கல்லூரியின் அதிபராக நியமிப்பதற்கு மானிப்பாய் கல்விச் சமூகமும் அவை சார்பான அமைப்புக்களும் முயற்சித்து வருவதாக தெரிய வருகிறது. அதிபரை இடைநிறுத்தியமைக்கான காரணங்களை இதுவரை சரி யான முறையில் தெளிவுபடுத்தாமையால், மகாணகல்வி அமைச்சின் ஊடாக உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும், கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சில காரணங்களை முன்வைத்து கல்லூரி அதிபரை இடைநிறுத்தி புதிதாக அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (91)

# பெரும்பாலான பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்கள்

(யாழ்ப்பாணம்)

வேலையற்ற பட்டதாரிகளை அரச சேவைகளில் இணைத்துக்கொள்ளும் முகமாக, முதற்கட்டமாக தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டதாரிகளில் கணிசமான அளவினருக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக தெரியவருகிறது.

அரச சேவைகளில் இணைத்துக் கொள்வதற்காக முதற்கட்டமாக 170,23 பட்டதாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் ஒருதொகையினருக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இவர்களுக்கான கற்பித்தல் தொடர்பான பயிற்சிகள் செப்ரெம்பர் 2ஆம் திகதி மாவட்ட மட்டத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இவர்களுக்கான பயிற்சி நெறிகளை மஹரகம தேசிய கல்வி நிறுவனமும், கல்வி வலயமும் இணைந்து நடத்தவுள்ளன.

இந்தப் பயிற்சிகளின் பின்னர் இவர்களுக்கு பாடசாலைகளில் நிரந்தர ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்குவது தொடர்பான அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்களுடனான சந்திப்பு ஒன்று பத்தரமுல்ல, இசுருபாயவில் உள்ள கல்வி அமைச்சில் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சாவகச்சேரி வட்டத்துக்கான லியோ கழகம் அங்குரார்ப்பணம்

சாவகச்சேரி வட்டத்துக்கான லியோ கழகம் அண்மையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக லயன் கே.துரைராஜா கலந்து கொண்டார். மற்றும் கல்லூரி அதிபர் லயன்ஸ் கழக உறுப்பினர்கள், லயன் இராஜகுலேந்திரம் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

தொடக்கச் செலவுகளை கல்லூரியின் பழைய மாணவன் எஸ்.சந்திரநாதன் அன்பளிப்புச் செய்தார். இந்த நிகழ்வில் லியோகழக நிர்வாகக் குழுத்தெரிவும் இடம் பெற்றது. 40 புதிய அங்கத்தவர்கள் புதிதாக இணைக்கப்பட்டு 'நலிவடைந்த மக்களுக்கு உதவுதல்' எனும் லியோக் கழக கோட்பாட்டுக்கு அமைய சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர். (90)

# சேதனக் கழிவுகளை பசளையாக மாற்ற காக்கை தீவில் புதிய தொழிற்சாலை

காக்கை தீவில் உள்ள யாழ் மாநகர சபைக்குச் சொந்தமான 90 ஏக்கர் நிலப்பரப்பில் சேதனக் கழிவுகளை உரமாக மாற்றும் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்படவுள்ளது.

குடாநாட்டில் பல்வேறு இடங்களிலும் கொட்டப்படும் குப்பைகள் மற்றும் கழிவுகளை சேகரித்து அவற்றை உரமாக மாற்றியமைக்கும் செயற்பாடு இடம் பெறவுள்ளதாக யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராஜா தெரிவித்தார்.

இதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் தொழிற்சாலைக்கான வரைபடமும் தயாரிக்கப்பட்டுள்ளதாக மாநகர சபை ஆணையாளர் தெரிவித்தார்.

இந்தத் தொழிற்சாலை அமைப்பதற்கு முதற்கட்டமாக குப்பை கூழங்களை அகற்றும் புல்டோசர் ஒன்று மீள் குடியேற்றம், மற்றும் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் யாழ் மாநகர சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணிப்பாளர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம்

வெளிநாட்டுவேலைவாய்ப்புப் பிரிவின் தொழில் நுட்பப் பயிற்சி அதிகார சபையின் பணிப்பாளர் அய குணவர்த்தன நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார்.

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற நேர்முகத் தேர்வுக்காகவே இவர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார்.

தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிற்சிபெற்று தகுதிச் சான்றிதழ்கள் வைத்திருப்போர், தொழிநுட்ப வல்லுனர்கள் ஆகியோர் இந்த நேர்முகத்தேர்வில் தோற்றினர்.

இருநூறுக்கும் மேற்பட்டோர் இந்த நேர்முகத் தேர்வில் பங்கு பற்றினர்.

இந்த நேர்முகத்தேர்வில் பங்குபற்றியோரில் தெரிவு செய்யப்படுபவர்கள் அரசின் கடனடிப்படையிலான மிகக் குறைந்தளவு செலவுடன் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைவாய்ப்புக்காக அனுப்பிவைக்கப்படவுள்ளனர்.

இதேவேளை, மேலும் ஒரு தொகுதியினர் தெரிவு செய்யப்பட்டு மலேசியா, இத்தாலி போன்ற நாடுகளுக்கும் அனுப்பிவைக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் இன்றும் தொழில் வாய்ப்புக்கான நேர்முகத் தேர்வொன்று நடைபெறவுள்ளது.

இது வடக்குக் கிழக்கு துரித அபிவிருத்தியில் தொழிநுட்பவியலாளர்கள் உள்வாங்கப்படுவதற்கான நேர்முகத் தேர்வு எனத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

## நெடுந்தீவுக்கு வைத்திய அதிகாரி நியமனம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு புதிய வைத்திய அதிகாரியாக புங்குடுதீவு வைத்தியசாலையில் பணியாற்றிய கே.ரி. உமாபதிசிவம் கடந்த 16ஆம் முதல் திகதி நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகின்றார்.

இதேவேளை, இதுவரை காலமும் உலக சுகாதார நிறுவனத்தின் அனுசரணையுடன் நியமிக்கப்பட்ட சேவையாற்றிவந்த டொக்டர் ஆர்.ஜே. நந்தனிவே தனது ஒப்பந்த காலம் முடிவடைந்துள்ளமையால் பதவி விலகிச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

# நெடுந்தீவு பிரதேசத்தில் உளவியல் கருத்தரங்கு

யுனிசெவ் நிறுவன அனுசரணையுடன் "சாந்திகம்" உளவளத்துணை நிறுவனத்தினர் நெடுந்தீவுப் பிரதேசத்தில் கடந்த இரு தினங்களாக உளவியல் தொடர்பாக கருத்தரங்குகளை நடத்தி வருகின்றனர்.

கடந்த செவ்வாய்க்கிழமையன்று நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி மண்டபத்தில் சாந்திகம் நிறுவனத்தால் பயிற்றப்பட்ட நெடுந்தீவில் செயற்பட்டு வரும் 30 பேரைக் கொண்ட குழுவினருக்கான புத்தூக்கல் கருத்தரங்குகளும், பயிற்சிகளும் வழங்கப்பட்டது.

மறுநாள் நெடுந்தீவு மகா வித்தியாலயத்தின் அதிபர், ஆசிரியர், மாணவர்களுக்கு உளவியல், பாலியல் தொடர்பான கருத்துரைகள் வழங்கப்பட்டது.

இவர்களுடன் யுனிசெவ் நிறுவனப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகளை நடாத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. (113)

# குழாய் மூலம் விநியோகிக்கப்படும் குடிநீர் உவராக மாறுகிறது

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பகுதியில் குழாய் மூலம் விநியோகிக்கப்படும் குடிநீர் கடும் உவர்ப்புத்தன்மையாகி பாவிக்க முடியாத நிலையில் உள்ளது.

தற்போது கடும் வெயில் காரணமாக ஏற்பட்ட வரட்சித் தன்மையே இந்த மாற்றத்துக்குக் காரணமெனத் தெரியவருகிறது. அது மட்டுமன்றி நீர் விநியோகக் கிணறுகளும் வற்றிவிடும் அபாய நிலையும் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வரட்சிக்காலக் குடிநீர் விநியோகம் என்ற அடிப்படையில் தற்போது நெடுந்தீவு பிரதேச சபையினர் பவுசர் மூலம் குறிப்பிட்ட சில இடங்களுக்கு குடிநீர் விநியோகம் இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (113)

# குடிநீர் விநியோகத்துக்கு பவுசர்கள் அன்பளிப்பு!

யாழ். குடாநாட்டில் குடிநீர் வழங்கல் நடவடிக்கையை துரிதகதியில் மேற்கொள்வதற்காக யுனிசெப் நிறுவனத்தினரால் தண்ணீர் பவுசர்கள் யாழ். மாநகர சபைக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே மாநகர சபையிடம் உள்ள தண்ணீர் பவுசர்களின் மூலம் நீர்வழங்கலை மேற்கொள்வதால், பல அசௌகரியங்களை எதிர்நோக்கிய வேளையில் இந்தத் தண்ணீர் பவுசர்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



யாழ். மாவட்ட ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்க, புதிய அலுவலக திறப்பு விழாவில் டொக்டர் நந்குணம் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். (111)

## பழுதடைந்த நிலையில் கல்வியங்காடு பாலம்

பருத்தித்துறை வீதியில் கல்வியங்காடு 3ஆம் கட்டை பாலம் சரியான முறையில் புனரமைக்கப்படாது உள்ளது.

இந்தப் பாலமானது சேதமுற்று இரு தடவைகள் திருத்த வேலைகள் செய்யப்பட்டும் கூட, ஒழுங்கான முறையில் திருத்தப்படாதன் காரணமாக பயணிகளும், சாரதிகளும் இடர்களை எதிர்நோக்குவதாக தெரிவித்தனர். (90)

## மீன் சந்தை புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

சங்கானையில் உள்ள மீன் சந்தையில் காணப்பட்ட பற்றைகள் வெட்டி துப்புரவு செய்யப்பட்டதுடன் பராமரிப்பு இன்றிக் காணப்பட்ட எல்லைகள் புனரமைக்கப்பட்டு மீன் சந்தையை சுற்றி முட்கம்பியால் வேலிகள் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் மக்களுக்கு ஏற்பட்ட சிரமங்கள் நீங்கியுள்ளன என தெரிவிக்கப்படுகிறது. (47)

## 782 இலக்க பஸ் சேவை சீரில்லை

(காரைநகர்)

காரைநகர் - சங்கானை ஊடாக யாழ்ப்பாணத்துக்கு காலை 6.45 இற்கு சேவையிலீடுபடும் 782 ஆம் இலக்க பஸ்சேவை சீரின்மையால் அதை நம்பிப் போக்குவரத்தை மேற்கொள்ள காத்திருக்கும் ஊழியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (47)

## பஸ் சேவை ஆரம்பிக்க கோரிக்கை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை மற்றும் குறிகாட்டுவான் ஆகிய இடங்களுக்கு சேவையில் ஈடுபடும் வடபிராந்திய போக்குவரத்துச்சபை பேருந்து சேவைகளை அல்லைப்பிட்டி கிராமம் ஊடாக நடத்துமாறு அல்லைப்பிட்டி கிராம மக்கள் வடபிராந்திய போக்குவரத்து சபையின் பொதுமுகாமையாளரைக் கோரியுள்ளனர்.

தற்போது இந்தக் கிராமத்தில் பெருமளவான மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள நிலையில், நீண்ட தூரம் நடந்துவந்தே போக்குவரத்து சேவைகளை பெறவேண்டியுள்ளதாக இந்தப் பிரதேச மக்கள் கவலை தெரிவித்தனர். (99)

# நிரந்தர வைத்தியரை நியமிக்கக் கோரிக்கை

வேலணைப் பொது மருத்துவமனைக்கு நிரந்தர வைத்திய அதிகாரி ஒருவரை நியமிக்குமாறு வேலணைப் பிரதேச பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த வைத்தியசாலையில் பணிபுரிந்த வைத்திய அதிகாரி இடமாற்றம் பெற்றுச் சென்றதை அடுத்தே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புங்குடுதீவு பொது மருத்துவமனைக்கும் நிரந்தர வைத்திய அதிகாரி ஒருவரை நியமிக்க வேண்டும் எனக் கோரி கடந்த 13ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிமனை முன் அமைதியான போராட்டம் ஒன்றை புங்குடுதீவு மக்கள் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (99)

# மீளக் குடியமர்ந்தவர்களுக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(நெடுந்தீவு)

இந்திய அகதிமுகாம்களில் இடம்பெயர்ந்து சென்று தங்கியிருந்தவர்களில் இந்தவருடம் ஏப்ரல் 15 ஆம் திகதிக்குப் பின்னர் மீளக்குடியமர்ந்த நெடுந்தீவுப் பிரதேச மக்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு கடந்த 18 ஆம் திகதியன்று மாலை 4.30 மணிக்கு நெடுந்தீவுப் பிரதேச சபை பொது நூலக மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தக் கருத்தரங்கிலே மீளக்குடியமர்ந்த மக்களின் தொழில் முயற்சியைத் தொடங்குவதற்கான தேவைகள் மற்றும் மருத்துவ, உளவியல் தேவைகள் போன்றன கேட்டறியப்பட்டதுடன், நிர்வாகம்தொடர்பாகவும், அவற்றின் தேவைகளை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பது தொடர்பாகவும், விளக்கமளிக்கப்பட்டதுடன் கண்ணிவெடி தொடர்பான விழிப்புணர்வுக் கருத்துக்களும் எடுத்துக் கூறப்பட்டது.

இந்தக் கருத்தரங்கை ஐ.ஓ.எம். நிறுவனத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர். இதில் யுனிசெவ் பிரதிநிதிகளும், நெடுந்தீவுப் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர். (113)

# வீதிக்கடவை இன்றி மாணவர்கள் சிரமம்

பருத்தித்துறை தும்பளை வீதியில் அமைந்துள்ள யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்துக்கு முன்பாக வீதிக்கடவை, பாடசாலைக் குறியீடு மற்றும் வேகக் கட்டுப்பாட்டுக் குறியீடு இன்றி மாணவர்கள் சிரமப்படுகின்றனர்.

ஆண்டு ஒன்று தொடக்கம் ஆண்டு பதினொன்று வரையான 700இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்விகற்கும் இந்தப் பாடசாலையின் முன்பாக அமைந்துள்ள வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பணிமனையூடாக மனல் அகழ்வதற்கான அனுமதிப் பத்திரம் வழங்குவதனாலும், தும்பளையில் இருந்து அம்பன் வரையான கிராமங்களுக்குச் செல்வதற்கான பிரதான வீதியாக இந்த வீதி அமைவதனாலும் போக்குவரத்து நெரிசல்கள் இந்த வீதியில் அதிகமாகவுள்ளது.

வீதிக் குறியீடுகள் இடுவது தொடர்பாகப் பலமுறை பாடசாலை நிர்வாகம், தும்பளை இலட்சுமணனதோட்ட தொண்டர்சபையும் சம்பந்தப்பட்ட அமைப்புகளுக்குத் தெரிவித்தும் எது வித பயனும் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (26)

# தங்கூசி வலை பாவனைக்கு முற்றாகத் தடை விதிப்பு!

வடமராட்சி கிழக்கு கடல் எல்லைப் பரப்பினுள் தங்கூசி வலை போட்டு மீன் பிடிப்பதை வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் முற்றாகத் தடைசெய்துள்ளது.

பல இலட்ச ரூபாமுதலீடு செய்து கரைவலை, படுப்பு வலைத் தொழிலில் ஈடுபட்டுள்ள பல கடற்றொழிலாளர்கள் இதனால், வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு தங்கூசி வலைத் தொழில் செய்ய அனுமதி தருமாறு வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தைக் கேட்டுள்ளனர். (21)

# பளை - முகமாலை பகுதிகளுக்கு விரைவில் மின் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இன்னும் ஒரு வார காலத்தில் பளை-முகமாலைப்பகுதிகளுக்கான மின் விநியோகம் நடைபெறவுள்ளது.

முகமாலை இராணுவச் சோதனைச் சாவடி, பளை விடுதலைப்புலிகளின் சோதனைச் சாவடி உள்ளிட்ட பிரதேசங்களோடு பளைப்பிரதேசத்தின் குறிப்பிட்ட சில பகுதிகளுக்கும் இன்னும் ஒரு வாரத்துக்குள் மின்சாரம் வழங்கப்பட்டுவிடும் என இலங்கை மின்சார சபையின் வட மாகாண பொது முகாமையாளர் எஸ். கமலநாதன் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடனேயே இந்தப் பகுதிகளுக்கான மின்சாரம் வழங்கலுக்கான ஆயத்த வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (கு)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்*
*பகைவர்கண் பட்ட செருக்கு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## சமாதானம் கலைகிறதா? போர்மேகம் சூழ்கிறதா ?

நாளுக்குநாள் தற்போது நடைமுறையிலிருக்கும் சமாதானச் சூழலுக்கு அச்சுறுத்தல் அதிகமாகிக் கொண்டே வருகிறது.

தென்பகுதியின் பிரதான அரசியல் கட்சிகள் அனைத்துமே பெரும்பாலும் சமாதானம் என்ற வார்த்தையை தமது அரசியல் மற்றும் ஏனைய நலன்களுக்காக பயன்படுத்த முயல்கின்றனவேயன்றி அதனை வலுப்படுத்தவோ, அதனை முன்னெடுக்க இடையூறாக இருக்கும் தடைகளைத் தகர்த்தெறியவோ, அதன் மூலம் இந்த நாட்டின் பலதசாப்தகாலப் பிரச்சினைக்கு ஒரு உறுதியானதும், நீதியானதுமான அரசியல் தீர்வினை பேச்சுவார்த்தைகள் மூலம் அமைதி வழியில் எட்டவோ விரும்புவதாகத் தெரியவில்லை.

கடந்த இரண்டரை ஆண்டுகால அமைதி நிலை எந்தக் கணத்திலும் உடைந்து போகலாம் என்ற அச்சத்தையே தென்பகுதி அரசியல் தலைமைகளின் பொறுப்பற்ற அறிக்கைகளும், அதிகாரத்தொனியுடன் கூடிய எச்சரிக்கைகளும் ஏற்படுத்திவருகின்றன.

ஜனாதிபதி தான் சமாதானத்திற்காக முழுநேரமும் உழைப்பதற்காகவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமைப்பதவியைத் துறந்ததாகக் கூறிக் கொண்டாலும், அவரது சமாதான முன்னெடுப்பு நடவடிக்கைகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் படைகளை அணிவகுத்துச் செல்ல உத்தரவிடுவேன் என்ற அச்சுறுத்தல் அறிக்கையில் தற்போது வந்துநிற்கிறது.

கிழக்கில் நிலவும் பதற்றத்திற்கு அரசின் குயுக்தியான நடவடிக்கைகளும், இராணுவ புலனாய்வு பிரிவினரின் சமாதானத்தை குழப்பி மீண்டும் யுத்தத்தை உருவாக்கும் மூலோபாயத்தின் அடிப்படையிலான உத்திகளைக் கொண்ட நிழல் யுத்த நடவடிக்கைகளும் தான் காரணம் என்பதை அங்கு நடந்து முடிந்த பல்வேறு வன்முறைகளும் நிரூபித்துள்ள நிலையில், நேற்று முன்தினம் கிழக்கில் குற்றச் செயல்களில் சம்பந்தப்பட்டோரை கைது செய்யும் முயற்சியிலான தேடுதல் நடவடிக்கை என்ற பெயரில் வாழைச்சேனை நகரிலும் அதனை அண்டியுள்ள பகுதிகளிலும் இராணுவமும் பொலிஸும் பாரிய சுற்றிவளைப்புத் தேடுதல் ஒன்றை நடத்தியுள்ளமையானது மீண்டும் போர்ச்சூழலை ஏற்படுத்துவதற்கான முன்னோடி நடவடிக்கை என்றே எண்ணத் தோன்றுகிறது.

ஜனாதிபதி படையினரை அணிவகுத்துச் செல்ல உத்தரவிடுவேன் என்று அச்சுறுத்தல்விடுத்த இரண்டு நாட்களில் இந்தச் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கை நடைபெற்றுள்ளது. இந்தத் தேடுதல் நடவடிக்கை முன்னறிவித்தல் ஏதுமின்றி திடீரென மேற்கொள்ளப்பட்டதுடன் அதிகாலை முதல் நண்பகல் வரையும் தொடர்ந்துமுள்ளது. இந்தத் தேடுதல் சோதனை முன்னெடுத்தல்களின் போது அரச படைகளுடன் துணைப் படைகளாக இயங்கும் ஆயுதக்குழுக்களும் இணைந்து செயற்பட்டுள்ளமைதான் பிரகடனம் செய்யப்படாத ஒரு யுத்தத்திற்கான ஒத்திகையாக இதனை மதிப்பிடவும் வைத்துள்ளது.

இந்தத் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தொடங்கிய பின்னர், தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைத் தடுக்க- தான் உரிய பணிப்புரைகளை படையினருக்கு வழங்கியுள்ளதாக ஜனாதிபதி அவர்கள் தெரிவித்துள்ளமையானது, நாட்டினை அவர் 1995 காலப் பகுதிக்கு நகர்த்த தொடங்கிவிட்டார் என்பதையே உறுதி செய்வதாகவுள்ளது.

அதாவது அவர் மீண்டும் தனது பாணியில் சமாதானத்தை உருவாக்கத் துணிந்து விட்டார் போலும். அவரது சமாதானத்திற்கான யுத்தம் என்ற கோட்பாட்டை அவர் இன்னமும் கைவிடத் தயாராக இல்லை என்பதை தனது அறிவிப்புக்கள் மூலம் மீண்டும் வலியுறுத்தியுள்ளார் என்றே கூறவேண்டும்.

அவர் இப்போது தனது சமாதானத்துக்கான யுத்தம் 2 ஐ ஆரம்பிப்பதற்கான முதற்கட்ட நடவடிக்கையாகவே இந்தப் பணிப்புரைகளை வழங்கியுள்ளார் என்றே அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

இதனை மேலும் வலியுறுத்துவது போன்று இராணுவப் புலனாய்வுப் பரிவினரின் எச்சரிக்கை அறிக்கைகள் உள்ளன.

- கொழும்புக்குள் 300 விடுதலைப் புலிகள் ஊடுருவியுள்ளனராம் !

- தொப்பிகல காட்டுப் பகுதிக்குள் பெரும் தாக்குதலை நடத்த விடுதலைப்புலிகள் தயாராகி வருகின்றனராம்...

இவையெல்லாம் இராணுவப் புலனாய்வாளர்களின் கண்டுபிடிப்புக்களாக அரசுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாம்....

இதனை அடிப்படையாக வைத்து மீண்டும் ஒரு யுத்த சூழலை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை அரசு முன்னெடுக்கின்றது என்பதையே இன்றைய நாட்களில் வெளியாகும் செய்திகள் நிரூபிப்பதாகவுள்ளன.

போர்நிறுத்த மற்றும் புரிந்துணர்வு உடன்பாட்டை மீறி சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்வதும், யுத்தம் ஒன்றை ஆரம்பிக்கத்தூண்டும் செயற்பாடுகளில் ஈடுபடுவதும், இராணுவ மற்றும் பொலிஸ் தரப்பினரின் சுயாதனமான - தன்னிச்சையான நடவடிக்கையாக இருக்கமுடியாது.

அரசினது - குறிப்பாக ஜனாதிபதியினது பச்சைக் கொடி காட்டல் சமிக்ஞை இதற்கு இருந்தே தீரும் என்பதில் ஐயமில்லை.

சர்வதேச சமூகத்தின் "சமாதானத்தை தொடருங்கள்" என்ற இடைவிடாத அழுத்தம் ஜனாதிபதியால் எதுவுமே செய்ய முடியாத சூழலை அவருக்கு ஏற்படுத்தியுள்ளது. சமாதானத்தை - பேச்சுவார்த்தைகளை நெத்தியடியாக நிராகரிக்கும் சிங்களப் பேரினவாதிகளை புறந்தள்ளி, தேசிய நலனை பாதுகாக்க சமாதானத்தை முன்னெடுக்கும் திராணி அவருக்குக் கிடையாது என்பதை அவரது சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பான முரண்பாடான தளம்பல் அறிக்கைகள் நிரூபித்த நிலையில்...

அவருக்கு மாற்றுத் தேர்வாக யுத்தம் தான் உள்ளது போல் தெரிகிறது. தேசியநலனைப் புறந்தள்ளி தமது அரசியல் சுயநலத்தை பேண முனையும் தலைவர்களால் நாடும் மக்களும் பேரழிவையே சந்திக்கவேண்டி நேரிடும். ஜனாதிபதி இதனை புரிந்துகொள்ளும் நிலையில் இல்லை என்றே தெரிகிறது.

## நாடும் நடப்பும்




# அரசாங்க முகாமைத்துவ சேவைக்கு எதிர்ப்பு எழுதுவினைஞர் ஆர்ப்பாட்டத்துக்கு ஆயத்தம்

எழுதுவினைஞர்கள், அரச தட்டெழுத்தாளர்கள் உட்பட ஏழு சேவைகளை ஒன்றிணைத்து அரச முகாமைத்துவ சேவையாக மாற்றுவதற்கு அரசாங்கம் எடுத்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்தாது விடுமாறும், எழுதுவினைஞர் சேவைகளை ஒன்றிணைத்து நிர்வாக உதவி சேவையாக மாற்றுமாறு அரச சுயாதீன சேவைகள் சங்கம் அரசிடம் கோரியுள்ளது.

இந்தச் சேவைகளை ஒன்றிணைப்பதென அரசு எடுத்துக் கொண்ட தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து 3 ஆயிரம் எழுதுவினைஞர்களிடம் கையொப்பங்களைத் திரட்டிய கடிதமொன்றை பொதுநிர்வாக அமைச்சுக்கு அனுப்பிவைத்துள்ளதாகவும் அந்தத் தொழிற்சங்கத்தின் செயலாளர் ரட்ணவீர தெரிவித்தார்.

இது குறித்து அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்காது விட்டால் 30 ஆயிரத்துக்கும் அதிகமான எழுதுவினைஞர்கள் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தட்டெழுத்தாளர்கள், சிறாப்பர்கள், களஞ்சியக் காப்பாளர்கள், சுருக்கெழுத்தாளர்கள் போன்ற சேவைகளை எழுதுவினைஞர் சேவைகளோடு ஒன்றிணைத்து அரசு முகாமைத்துவ சேவையை உருவாக்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

தற்பொழுது நடைமுறையிலுள்ள எழுதுவினைஞர் சேவைகள் என்ற பெயரையும் மாற்றி அதற்குப் பதிலாக நிர்வாக உதவியாளர் சேவையை ஏற்படுத்த அமைச்சருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அரச சேவையையும் அனைத்து எழுதுவினைஞர் சேவையையும் அழிப்பதற்கு இந்த அரச முகாமைத்துவ சேவை காரணமாக அமையும் என்பதால், அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (தே)

## பதிவு அலுவலகத்தில் படிவங்கள் பற்றாக்குறை

யாழ்.செயலக பிறப்பு - இறப்பு பதிவு அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்கள் பற்றாக்குறையாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த விண்ணப்பப் படிவங்களே தற்போது மக்களுக்கு வழங்கப்படுவதாகவும், கொழும்பிலிருந்து விரைவில் பொதி எடுத்துவரப்பட்டதும் இந்தத் தட்டுப்பாடு நீங்கிவிடும் எனவும் மாவட்டப் பதிவாளர் பி.ஈஸ் வரதாசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பொதுமக்கள் சாதாரண தாள் ஒன்றில் தெளிவாக தமது விபரங்களை எழுதி முத்திரையிடுவதன் மூலம் பிறப்பு - இறப்பு சான்றிதழ்களைப் பெறமுடியும்.

விண்ணப்பப்படிவங்களுக்கான தட்டுப்பாட்டைக் காரணங்காட்டி வெளியார் சிலர், பொதுமக்களை ஏமாற்றி பணம் அறவிடுவதாகவும், இதனால் பொதுமக்கள் அலுவலகத்துடன் தொடர்பை ஏற்படுத்தி வீணான பண இழப்புக்களைத் தவிர்க்கலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஆளணிப் பற்றாக்குறையை நீக்குவதற்கு நடவடிக்கை!

யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதாக மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மாநகரசபை மேற்கொண்டு வருகிறது. நூலகவியல் பாடத்தில் டிப்ளோமா கற்கைநெறியைப் பூர்த்திசெய்தவர்கள் இதற்கு விரைவில் நியமிக்கப்படவுள்ளனர்.

அண்மையில் திறந்துவைக்கப்பட்ட இந்தப் பொது நூல் நிலையத்தில் ஆளணிப் பற்றாக்குறை நிலவிவருகின்ற போதும், தாம் குறைந்தளவு ஊழியர்களுடன் அதிகளவான சேவையை வழங்கிவருவதாகவும், ஆளணி அதிகரிக்கப்பட்டால் மேலும் கூடிய சேவையை வழங்கமுடியும் எனவும், தற்போது இந்த நூலகத்தைப் பராமரிக்க மாதமொன்றுக்கு 5 லட்சம் ரூபா வரையில் செலவு செய்யப்படுவதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (சீ)

## பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி விசாரணைக்கு அழைப்பு!

பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி யாழ். மனித உரிமை ஆணைக்குழுவினால் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் பருத்தித்துறைப் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்து சம்பவத்துக்கான தீர்ப்பில் முறைகேடுகள் மேற்கொண்டதாக குற்றஞ்சாட்டப்பட்டு யாழ்.மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் அந்த அதிகாரி மீது முறைப்பாடு செய்யப்பட்டது.

இதுகுறித்து விசாரணைகளை மேற்கொள்ளச் சென்ற மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் பொலிஸ்நிலையப் பொறுப பதிகாரியினால் அவமதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலை குறித்து விசாரணை மேற்கொள்வதற்காகவே யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவின் பொறுப்பதிகாரி பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு அழைப்பாணை விடுத்துள்ளார்.

## நாடுதிரும்ப எத்தனித்த 22 ஈழத் தமிழர்கள் கைது

தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்குச் சட்டவிரோதமாகத் திரும்பிவர முயன்ற 22 இலங்கைத் தமிழ் அகதிகளை, நேற்றுமுன்தினம் இராமேஸ்வரம் அருகே கைதுசெய்து, பின்னர் விடுவித்ததாகத் தமிழகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் சேலம், நாமக்கல், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களிலுள்ள அகதிமுகாம்களில் தங்கி இருந்தவர்கள் எனத் தெரியவருகிறது.

இவர்களில் 10 பேர் பெண்களாவர். ஒருவருக்கு 6000 ரூபா என்று கள்ளத்தனமாக இலங்கைக்கு அழைத்துச் செல்ல முற்பட்ட வேளையிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் எனத் தெரியவருகிறது.

# வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 308 பேருக்கு ஆசிரிய நியமனங்கள்

கல்வியியற் கல்லூரியில் கல்வி பயின்று வெளியேறியவர்களில் 308 பேருக்கு வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஆசிரியா நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இவர்களில் 46 பேர் யாழ்.மாவட்டத்தில் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

கல்வியியற் கல்லூரியில் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்து வெளியேறியவர்களில் ஆரம்பக் கல்விக்கு தீவகத்தில் 20 ஆசிரியர்களும், வடமராட்சி வலயத்தில் 14 ஆசிரியர்களும், வலிகாமம் வலயத்தில் 12 ஆசிரியர்களும் நியமனம் பெற்றுள்ளனர். இவர்கள் செம்ரெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் தமது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளனர்.

இதேவேளை, அனலைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கு வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இதனால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்ற போதும் எவ்வகையான ஆசிரியர் நியமனங்களும் மேற்படி பாடசாலைகளுக்கு வழங்கப்படவில்லை.

யாழ்.மாவட்டத்தில் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டவர்களில் அதிகமானோர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.(தீ)

சமயம்....

# பூலோக கைலாசம் என போற்றப்படும் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இன்று கொடியேற்றம்



- அருளானந்தம்

தமிழ் தெய்வமாம் முருகனுக்குத் தமிழ் மக்கள் வதியும் இடமெல்லாம் கோவில்கள் எழுப்பப்பட்டுள்ளன. முருகனுக்கும் தமிழருக்குமிடையிலுள்ள தொடர்பு வரலாற்றுக்கும் அப்பாற்பட்டதெனலாம்.

ஈழத்திருநாட்டில் முருகப் பெருமான் கதிர்காமத்திலும், வடக்கே மாவிட்டபுரத்திலும் தொண்டமானாறு செல்வச் சந்நிதியிலும் நல்லூரிலும், கந்தவனக் கடவையிலும், மண்டூரிலும், சித்தாண்டியிலும், வெருகல் முதலிய புண்ணிய தலங்களில் பன்னெடுங்காலமாக கோவில் கொண்டு அருள் பாலித்து வருகின்றான்.

நல்லூர் என்றதும் நல்லூர்க் கந்தன்தான் நம்முன் தோன்றுகிறான். கந்தனின் இந்தத் திருக்கோவில் அமைந்துள்ள யாழ்ப்பாண நகரத்திலே "நல்ல-ஊர்" நல்லூர் சைவ அனுஷ்டானங்களுக்கெல்லாம் ஒரு குன்றாக விளங்குகிறது. நல்லூர்க் கந்தன் கோயிலை நடுக்களனாகக் கொண்டு, சுற்றியுள்ள வீதிகளிளெல்லாம் முருக பக்தர்களையே காணலாம். அங்கு வதியும் மக்கள் அனைவரும் அதிகாலையில் கந்தனின் மணியோசை தமது காதுகளில் ஒலிக்க, தமது அன்றாட கருமங்களை முருகன் திருவருள் கொண்டு ஆரம்பிக்கின்றார்கள்.

ஈழநாட்டிலே தமிழ் மன்னர் மணிமுடி தரித்துச் செங்கோல் ஓச்சிய காலத்தில் அவர்களின் இராசதானியாகிய நல்லூரிலே நடுநாயகமாக விளங்குகிறது. நல்லூர்க் கந்தசுவாமி கோவில்.

யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றிற்கும், நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் தல வரலாற்றிற்கும் நெருங்கிய பிணைப்புள்ளது. யாழ்ப்பாண இராச்சிய மக்களது எழுச்சியும் வீழ்ச்சியும் கந்தசுவாமி கோயிலின் தல வரலாற்றுடன் பின்னிப் பிணைந்தே நிகழ்ந்து வந்துள்ளன.

இத்தகு வரலாற்றுப் பெருமைகளை தன்னகத்தே கொண்டு விளங்கும் நல்லூரில் கந்தசுவாமிப் பெருமானுக்கு இன்று தாரண வருஷத்துக்கான கொடியேற்றப் பெருவிழா பக்தி பூர்வமாக ஆரம்பிக்கப்படுகின்றது.

நல்லூர்க் கந்தனின் கொடியேற்றத்துக்குத் தேவையான கொடிச்சீலையை நலலூரில் வாழ்கின்ற செங்குந்த மரபினரே அழகியதோ தேரில் வைத்துக் கொண்டுவந்து கொடுப்பது வழக்கம். யாழ்ப்பாணத்தில் வதியும் செங்குந்த மரபினர் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்குக் கொடிச்சீலை கொடுத்துதவுவது அவர்களுடைய முன்னோர் சிதம்பரக் கோயிலுக்குக் கொடிச்சீலை அளித்த வரலாற்றினை நினைவுபடுத்துகின்றது.

இன்று நல்லையம்பதியில் காலை 10.00 மணிக்கு கொடியேற்றம் நடைபெறுகின்றது. கொடியேற்ற விழாவை காண்பதற்கு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் நல்லூரில் கூடுகின்ற காட்சி பக்தி பூர்வமான ஒரு சூழ்நிலையை தோன்றுவித்துக் கொண்டிருக்கும். மஹோற்சவங்கள் ஆரம்பமாகும். இன்றிலிருந்து அதிகாலை 4.00 மணி முதல் நல்லைக் கந்தன் திருப்பதியில் நேர்த்திக் கடனை நிறைவு செய்வதற்காக அங்கப் பிரதட்சணம் செய்யும் அடியார்கள் "முருகா முருகா" என்ற நாமம் எங்கும் பக்திப் பரவசத்தை தோன்றுவிக்கும்.

முதலாம் தினத்தன்று கொடியேற்றத் திருவிழா ஆரம்பமாகி தொடர்ந்து பத்தாம் திருவிழாவில் அழகிய மஞ்சத்திலிருந்து முருகப் பெருமான் அடியார்களுக்குக் காட்சி கொடுத்தருளுகின்றார். பதினேழாம் திருவிழாவன்று முத்துக்குமாரசுவாமி [illegible] வள்ளியம்மனும் மயில் வாகனங்களில் பூச்சப்பரத்தில் வீதிவலம் வந்த பக்தர்களுக்குக் காட்சியளிப்பார்கள் பத்தொன்பதாம் திருவிழாவன்று முருகன் கைலாய வாகனத்தில் காட்சி கொடுப்பார். இருபத்திரண்டாம் திருவிழா தண்டாயுதபாணி உற்சவமாகும். இதனை மாம்பழத் திருவிழா என்றும் அழைப்பர். இந்த விழா மிகவும் சிறப்பாக நல்லூரில் நடைபெறும். ஆதலால் இந்த விழாவை காண்பதற்கு பெருந்திரளான மக்கள் வந்து கூடுவார்கள்.

இருபத்தி நான்காம் நாள் தேர்த் திருவிழா நடைபெறும். கருணை கூர்முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும், பொன்மேனியும், மயிலூர்தியும் கோழிக் கொடியும், வடிவேலும் கொண்ட சண்முகமூர்த்தி, வள்ளி தெய்வயானை சமேதராய் அழகிய மலர் மாலைகளாலும். விலையுயர்ந்த தங்க நகைகளாலும் அலங்காரம் செய்யப்பெற்று, வெள்ளிச் சிங்காசனத்தில் வீற்றிருந்து தேருக்கு எழுந்தருளுவார்.

இருபத்தைந்தாம் நாள் தீர்த்தோற்சவமாகும். இவ்வாறாக இருபத்தைந்து தினங்கள் நடைபெறும் மஹோற்சவங்களில் சிறப்பான மஹோற்சவங்களாக இவை கருதப்படுகின்றன.

மஹோற்சவ காலத்தில் நல்லூர்ப் பெருமான் ஆலயம் பூலோக கைலாயமாகக் காட்சியளிக்கின்றது. அடியார்கள் அமைதியாக வீதிவலம் வந்து கந்தனை வழிபடுவர். இறைவன் தூய்மையே உருவானவன். தூய்மை தங்குமிடத்தில் இறைவன் தங்குகிறான். அங்கு அழகு பொலிகின்றது. அன்பு மலிகின்றது. மனம் இலயிக்கின்றது. இன்பம் பெருகுகின்றது.

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட

தீரவேல் செவ்வேள் திருக்கை வேல் - வாரி

குளித்த வேல் கொற்றவேல் ஆர்மார்புங் குன்றுந்

துளைத்த வேலுண்டே துணை.

இத்தரு அச்சம் அகற்றும் அயில் வேல் கந்தப் பெருமான் மூலஸ்தானில் காணப்படுகின்றது. அந்த வேலை வணங்குவது எமக்கு வேலை என இந்த நாட்களில் சிந்திப்போம். சிறப்புற மஹோற்சவங்களில் கலந்த நல்லைக் கந்தனின் அருளுக்கு அனைவரும் பாத்திரமாவேமாக.

## ஈழத்தேசமே! வணங்கி கொடியேறுது

நல்லைக் கந்தவேளுக்கு கொடியேறுது
தொல்லைகள் தீர்ப்பதற்காய் கொடியேறுது
கிட்ட வரும் பகை போக்க கொடியேறுது
துட்டர்கள் விலகிடவே கொடியேறுது
பக்தர்கள் அலையலையாய் மோதக் கொடியேறுது
திக்கெங்கும் முருகா என்றழைக்க கொடியேறுது
அலங்காரக் கந்தவேளுக்கு கொடியேறுது
ஈழத் தேசமே வணங்கி நிற்க கொடியேறுது.

- இராமாவில்ச் செல்வி.

வாரநோக்கு....

# சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் படையிருக்கும் என்ன தொடர்பு?

- யாழவன்

"சண்டையென்றால் சண்டை" "சமாதானம் என்றால் சமாதானம்! வன்னித் தலைவரிடம் கூறுங்கள்" என தம்பி முழக்கமிட்டு முடிய "புலிகள் பகுதிக்கு படைகளை அணிவகுத்து அனுப்பப் போவதாக எச்சரிக்கை விடுக்கின்றார் அக்கா. இவையொன்றும் என்றுமே புதியவையல்ல. காலத்துக்கு காலம் சிங்களப் பேரினவாதிகளின் சிந்தையிலே நிறைந்த உளுத்துப்போன இனவெறியின் கூச்சல்களே இவை. பின் விளைவுகளையோ, அல்லது சம்பவங்கள் நடைபெறுவதற்கான மூலங்களையோ ஆராய்ந்து அறியாமையினால் ஏற்படும் பித்தலாட்டத்தனமான பிதற்றல்களே இவையாகும்.

ஆனால், மேலே தெரிவிக்கப்பட்ட இரு கருத்துக்களும் சமாதான காலத்திலே வெளியிடப்பட்டவைதான் அவையொரு காத்திரமான இடத்தை ஊடகங்களிலே பிடிப்பதற்குக் காரணமாகவிருந்தது. ஏனெனில் இவையிரண்டுமே சமாதானம் நோக்கிய பயணத்திற்கு இடையூறு விளைவிக்கக் கூடிய கருத்துக்களாகவேயுள்ளன. அதிலும் அநுராவின் கருத்தை அவ்வளவாக பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லாவிட்டாலும் நாட்டின் தலைவியாகவும் பாதுகாப்பு அமைச்சராகவும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகவுமுள்ள சந்திரிகாவினது கருத்தை அவ்வளவு சாதாரணமாக எடைபோட்டு விட முடியாது. எடைபோட்டு விடவும் கூடாது.

"சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும்" என்பது போல ஜனாதிபதியின் சிந்தையிலே போர் வெறியும் அதனை சமாதானத்துக்கான போர் எனும் போர்வையிலே நடாத்தும் குள்ள நரித்தமான தந்திரமும், இனப்பிரச்சினைக்கு நியாயமான, நீடித்த. நிலையான தீர்வைப் பெறுவதிலே காட்டாத அக்கறையும் நிறைந்துள்ளமைதான் மேற்கண்ட கருத்தை வெளிப்படுத்துவதற்கு காரணமாக அமைந்தது.

விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்குமிடையே புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டு சமாதான நகர்வுகள் தொடர்ந்தபோது பின் ஏற்பட்ட சில இடையூறுகள் காரணமாக தற்போது நாட்டிலே அசாதாரணமானதொரு சூழ்நிலை நிலவிவருகின்றமை அனைவரும் அறிந்ததே. படுகொலைகளும், துப்பாக்கி வேட்டுக்கள் தீர்ப்பும் தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

துர்அதிஷ்டவசமாக இந்தச் சம்பவங்களில் பாதிக்கப்படுபவர்கள் விடுதலைப்புலிகளுக்கு எதிரானவர்களாகவும் சிலர் தீவிர ஆதரவாளர்களாகவும் இருக்கின்றமையானது அரசுக்கும் புலிகளுக்குமிடையே திரைமறைவுப் போரொன்று நடைபெற்று வருகின்றது. எனும் மாயையை தோற்றுவித்துள்ளது. இதனால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை தீர்க்கவேண்டிய தலையாய கடமையை தன் கரங்களில் தங்கியுள்ள ஜனாதிபதி நெருக்கடிக்கான தீர்வுகளைப் பற்றி சிந்திக்காது தான்தோன்றித் தனமான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றமையானது. மேலும் சிக்கல் நிலைகளை தோற்றுவிப்பதாகவே அமையும்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலே தற்போது சட்டம், ஒழுங்கு, சீர்குலைந்து வருகிறது. எனவே நாட்டின் தலைவி என்ற வகையிலே நாட்டு நலனை கருத்திற்கொண்டு சட்டத்தை நிலை நாட்ட வேண்டும். இதற்காக படைகளை அணிவகுத்து புலிகளின் பகுதிக்கு அனுப்பவும் தயாராகவுள்ளேன் என கடும் தொனியிலே எச்சரிக்கை விடுத்துள்ளார் ஜனாதிபதி.

ஒரு கோணத்திலே பார்த்தால் ஜனாதிபதியின் கருத்து ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவேயுள்ளது. அதாவது புலிகளுடைய கட்டுப்பாட்டுப் பகுதியிலே சட்டம் தனது கடமையை செய்ய முடியாதுள்ளது. இது உண்மையே எவ்வாறெனில் விடுதலைப்புலிகளுடைய பிரதேசத்திலே குற்றச்செயல்களில் ஈடுபடுவோர் அங்கிருந்து தப்பியோடி இராணுவ கட்டுப்பாட்டு பகுதிகளுக்குள்ளே தஞ்சம் புகுந்து விடுகின்றனர். இதனால் குற்றவாளிகளுக்கு உரிய தண்டனையை வழங்க முடியாத சட்டம் தவறிப் போகும் சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. இவ்வாறே, தேசியத்தை சூறையாடிய துரோகி கருணாவும் தாயகப் பகுதியிலிருந்து தப்பியோடி அரசிடம் குறிப்பாக இராணுவத்தினரிடம் சரணடைந்தார். அதுமட்டுமன்றி தனது கையாள்களை வைத்து குழப்பங்களை விளைவிக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றார். இதுவே இன்றைய ஸ்திரமற்ற நிலை தோன்றியுள்ளமைக்கான ஆணி வேராகும்.

சட்டம், நீதி பற்றியெல்லாம் பேசும் ஜனாதிபதி தான் அவற்றை சரியான முறையிலே கடைப்பிடித்து வருவதோடு நடைமுறைப்படுத்தி வந்தாலே நாட்டில் அரைவாசிப் பிரச்சினை தீர்ந்துவிடும். சட்ட சரத்துக்களை தனது சுயலாப அரசியலுக்காக பயன்படுத்தும் குறுகிய மனப்பாங்கு கொண்ட ஜனாதிபதி எவ்வாறு நாட்டு நலன்களுக்காக சட்டத்துறையை பாவிக்க முன்வருவார்? எப்படி அவரிடமிருந்து அத்தகையதொரு செயற்பாட்டை எதிர்பார்ப்பது?

ஊடகவியலாளர் நடேசன் படுகொலை செய்யப்பட்ட போதும். கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் தம்பையா சுட்டுக் கொலை செய்யப்பட்ட போதும், விடுதலைப்புலிகளின் போராளிகள் மீது கொலைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்ட போதும் ஜனாதிபதியினுடைய சட்டங்கள் எங்கே தூங்கிக் கொண்டிருந்தன? அல்லாவிடில், விசமிகள் சிலர் வெளிநாட்டு நிறுவனமொன்றின் வாகனங்களை தீயிட்ட போது, எதுவிதமான ஆதாரமும் இன்றி அந்த கீழ்த்தரமான செயலை புலிகள் தான் செய்தார்கள் என [illegible]னவாத ஊடகங்கள் குற்றம் சாட்டிய போது ஜனாதிபதியின் சட்டம் எங்கே போனது? என்றெல்லாம் அடுத்தடுத்து கேள்விகளைக் கேட்டால் மாறாக புலிகளுடைய சட்டத்துறை தான் தென்னிலங்கைக்குள் புக வேண்டிய சூழ்நிலை தோன்றும்.

ஏனெனில் நாளாந்தம் வன்னி வந்து திரும்பும் சர்வதேசப் பிரதிநிதிகளுள் பலர் விடுதலைப்புலிகளுடைய நிர்வாகத் திறனையும், நீதித்துறையின் சிறப்பையும் கண்டு பாராட்டிச் செல்வதை பத்திரிகைச் செய்திகள் வாயிலாகவும் செவ்விகள் வாயிலாகவும் அறிய முடிகின்றது. இந்த நிலையில் ஜனாதிபதி தெரிவித்துள்ள கருத்து வியப்புக்குரியதாகவேயுள்ளது.

அத்தோடு, சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ள இடங்களுக்கு பொலிஸாரை அனுப்புவதே சர்வதேச வழமையும் சட்ட நடைமுறையும் கூட மாறாக அடக்க முடியாத அளவுக்கு வன்முறைகள் வெடிக்கும் போதே ஆயுதப் படையினரின் உதவிகள் பெறப்படுகின்றன. ஆனால் ஜனாதிபதியோ இவை ஒன்றையுமே கருத்திற் கொள்ளாது படைகளை அணிவகுத்து அனுப்பி சட்டத்தை நிலை நாட்டப் போகின்றாராம்.

உண்மையிலேயே தற்போது இடம்பெற்று வரும் குற்றச் செயல்களுள் தொண்ணூறு சதவீதத்துக்கும் அதிகமானவை. அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலேயே இடம் பெற்று வருகின்றன. இவற்றினாலே கட்டுப்படுத்த முடியாது கையாலாகத் தனமாகவுள்ள இலங்கை இராணுவத்தினர் எவ்வாறு சுதந்திர பூமியாகவுள்ள தமிழர் தாயகப் பகுதிகளுக்குள் அணிவகுத்து வந்து சட்டத்தை காப்பாற்றுவார்கள்?

நூறு மீற்றர் இராணுவத்தினர் கண்காணிப்பு பணியிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கும் மட்டக்களப்பு பிரதான வீதியொன்றில் வைத்தே பட்டப் பகலில் ஒரு ஊடகவியலாளனை சுட்டுக் கொன்று விட்டும், காவலரண்கள் அதிகமாக விழிப்பாகவுள்ள நள்ளிரவு வேளையிலே இராணுவ தடைமுகாமைத் தாண்டி புலிகள் பகுதிக்குள் பிரவேசித்த ஆயுததாரிகள் அங்கவீனமுற்ற போராளிகளைச் சுட்டுக் கொன்றுவிட்டு மீண்டும் அதே இராணுவ சோதனைச் சாவடியூடாகவே திரும்பி தப்பிச் சென்றுமுள்ள கொலையாளிகளையே பிடிக்க முடியாது போன இராணுவம் எவ்வாறு சட்டத்தை நிலை நாட்ட பங்காற்ற முடியும். இது சிந்தனைக்குரியதல்லவா?

இது ஜனாதிபதி சமாதானத்தின் மீது கொண்டுள்ள அவநம்பிக்கையையும் போர் மீது கொண்டுள்ள அவாவையும் கோடிட்டு காட்டும் கருத்தாகவேயுள்ளது. புலிகள் பகுதிக்கு இராணுவத்தினரை அனுப்ப வேண்டிய அளவுக்கு அங்கு நிலைமை மோசமாகிவிட்டது என சர்வதேச சமூகத்தை எண்ணவைத்து அதன் பின் எழும் தப்பான அபிப்பிராயங்களின் பின்னணியில் "சமாதானத்துக்கான போர்" எனும் தனது நாடகத்தை அரங்கேற்ற முயலுகிறார் ஜனாதிபதி இதற்கான ஒரு அடியே அவரது மேற்கண்ட கருத்தின் கரு.

ஜனாதிபதி இந்த நயவஞ்சகத்தனமான வாதத்தை ஜாலங்களுக்குள்ளே, சர்வதேச சமூகம் வீழ்ந்து விடுமாக இருந்தால் அது இலங்கையின் ஊழ்வினைப் பயனாகவே இருக்கும். பரம்பரை அரசியலின் மூலமாக பண்டார நாயக்கா பரம்பரை இலங்கையின் முதற் குடிகளான ஈழத் தமிழர்களுக்கு விளைவித்து வரும் அவலங்களின் அடுத்த அத்தியாயமாகவே அமையும். அதுமட்டுமன்றி தூரநோக்கு சிந்தனையற்ற அரசின் செயலினால் நாடு அடையப்போகும் அவலத்தின் ஆரம்பமாகவும் இருக்கும்.

ஜனாதிபதி தனது கருத்து போரின் மூலமாக எதைச் சாதிக்க முயல்கிறார். இந்தியாவையும், அமெரிக்காவையும் நம்பி அவர்களின் சொற்படியே செயற்பட்டு வரும் சந்திரிகா ஏனைய நாடுகளை தனது சொற்படி நடப்பிப்பதற்கு திட்டம் தீட்டுகிறார். நோர்வேயை வெளியேற்றிய சந்திரிகா, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவரை திருப்பி அனுப்பிய சந்திரிகா மீண்டுமொரு போருக்கு தூபம் இட ஆரம்பித்துவிட்டார். இதன் விளைவு...?

இது இவ்வாறிருக்க தம்மிடம் பறிமுதல் செய்யப்பட்ட ஆயுதங்களை மீளவும் தம்மிடமே ஒப்படைக்கும் படி ஈ.பி.டி.பி.யினர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். அதனை எழுத்து மூலமாக கேட்டிருக்கிறார். ஜனாதிபதி ஏதோ தம்மிடம் ஆயுதம் எதுவுமே இப்போது இல்லையெனும் மாதிரியும் ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டமையே தமது உறுப்பினர்களின் இழப்புகளுக்கு காரணமெனவும் கதைவிடுகிறது ஈ.பி.டி.பி.

ஆனால், இதே கட்சி முக்கிய உறுப்பினர் ஒருவர் தான் அண்மையில் குருநகர் பகுதியிலே பொது மக்களொருவரை மோட்டார் சைக்கிளால் தாக்கி காயப்படுத்தியதுடன் அவரை மேலும் தாக்க முற்பட்ட வேளை பொதுமக்கள் திரண்டு எதிர்ப்புத் தெரிவிக்கவே துப்பாக்கியை காட்டி மிரட்டியுள்ளார். அப்போது கோபம் கொண்ட பொது மக்கள் அவரை வாளால் வெட்டி காயப்படுத்தியுள்ளனர்.

எனவே, ஈ.பி.டி.பி.யினர் தம்மிடமுள்ள துப்பாக்கிகளை வைத்து அப்பாவி பொதுமக்களை அச்சுறுத்துவதோடு, தற்போது மலிந்து போயுள்ள குற்றச் செயல்களின் அளவை மேலும் அதிகரித்துவிடுவார்கள் என்பது யதார்த்தமாக வெளிப்படுகிறது. எனவே தம்மை திருத்த முடியாதவர்கள். சட்டம் செத்து போய்விட்டதாக ஒப்பாரி வைப்பதை ஏற்றுக் கொள்ளமுடியாது.

எனவே தம்பக்கம் நிறையத் தவறுகளை பதுக்கி வைத்துள்ள அரசும் அதன் சார்பு கட்சிகளும் தம்மை திருத்திக் கொள்வதன் மூலமாகவே நாடு திருந்துவதற்கு வாய்ப்பை அளிக்கவேண்டும். அதைவிடுத்து மொட்டத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டு நீலிக் கண்ணீர் வடிப்பது அர்த்தமற்ற விடயமே யாகும். இதனை எப்போது ஜனாதிபதி உள்ளிட்டோர் உணருகிறார்களோ அப்போதுதான் இலங்கையில் இருந்து இருள் விலகத் தொடங்கும்.

♦♦♦

## சதார் தங்கியுள்ள பள்ளிவாசலை

# அமெரிக்க தாங்கிப் படைப்பிரிவு

# சுற்றிவளைத்துள்ளதாகத் தகவல்!



ஈராக்கின் கிளர்ச்சிவாதத் தலைவர் அல் சதார் தங்கியுள்ள இமாம் அலி பள்ளிவாசலை அமெரிக்காவின் தாங்கிப் படைப்பிரிவு சுற்றிவளைத்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தச் சுற்றிவளைப்பு நஜாவ் நகரில் நேற்றுமுன்தினம் இரவு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட குண்டுவீச்சுக்குப் பிறகு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக்கின் இடைக்காலப் பிரதமர் இயட் அலாவி- சதார் தனது ஆயுதங்களைக் கைவிட்டு பள்ளிவாசல்களிலிருந்து வெளியேறவேண்டுமென விடுத்த இறுதிக் காலக்கெடுவை சதார் ஏற்கமறுத்த பின்னரே இந்தத் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தானும், தனது அமைப்பின் உறுப்பினர்களும் தங்கியுள்ள பள்ளிவாசல்களை கையளிக்க தயாரென வும், ஆனாலும் சண்டை தொடர்ந்தும் நடத்தப்படும் எனவும் சதார் தெரிவித்துள்ளார். நஜாவ் நகரில் சதார் தங்கியுள்ளதாகக் கூறப்படும் பள்ளிவாசலைச் சூழவுள்ள பிரதேசத்தை நோக்கி அமெரிக்கத் தாங்கிப் படைகள் முன்னேறிவருவதாக நஜாவ் நகரிலுள்ள பி.பி.சி செய்தியாளர் கைல் மொறிஸ் தெரிவித்தார்.

நஜாவ் நகரில் கடந்த புதன் இரவு நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல் இந்தப் பிரதேசத்தில் நடைபெற்றுவரும் வன்செயல்களில் மிகப்பெரியதெனவும் அவர் தெரிவித்தார். இந்தத் தாக்குதலில் காயமடைந்தவர்கள் எனக் கூறப்படும் எவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படவில்லை என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன. இந்தத் தாக்குதலிலிருந்து சதாரின் படைகள் தப்பியிருக்கலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஈராக்கின் ஷியா முஸ்லிம்களின் மிகப்பெரிய மதகுருவான ஆயதுல்லா அலி அல் - சிஸ்ரானியின் தூதுக்குழுவிடம் இமாம்-அலி பள்ளிவாசலின் திறப்பை ஒப்படைப்பதற்கு சதார் தயாராக இருப்பதாக அவரது பேச்சாளர் ஷேக் அலி சாய்பானி தெரிவித்தார்.

ஆனாலும் ஈராக்கிய இடைக்கால அரசு கேட்டுக்கொள்வதற்கு இணங்க மெடி இராணுவப் படைப்பிரிவைக் கலைக்கும் எண்ணமே எமக்குக் கிடையாது. நாம் இமாம் அலி பள்ளிவாசலை மட்டும் பாதுகாக்கவில்லை. புனித நகரான முழு நஜாவ் நகரையுமே பாதுகாக்கவேண்டும். ஏனெனில் மக்கா நகரம் எங்களுக்கு எவ்வளவு புனித நகரமோ அதுபோலவே நஜாவ் நகரமும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை பலூஜா நகரில் அமெரிக்க விமானப் படையினர் நடத்திய தாக்குதலில் இரண்டு பொது மக்கள் கொல்லப்பட்டதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

பஸ்ரா நகரிலுள்ள எண்ணெய் விநியோகக் குழாய்கள்மீது சதார் ஆதரவுக் கிளர்ச்சிவாதிகள் தீவைத்துள்ளதாகவும், இதனால் எண்ணெய் விநியோகம் தடைப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை ஈராக்கில் அமைந்துள்ள அமெரிக்கத் தூதரகம் மீது நடத்தப்பட்ட மோட்டார் தாக்குதலில் அங்கு கடமையாற்றும் இரண்டு பணியாளர்கள் காயமடைந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

# நேபாள தலைநகரில் குண்டுவெடிப்பு பொலிஸார் உட்பட மூவர் காயம்!



(காத்மண்டு)

நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் மாவோ கிளர்ச்சிவாதிகள் நடத்திய குண்டுத்தாக்குதல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு பொலிஸார் உட்பட மூவர் காயமடைந்தனர்.

மாவோ கிளர்ச்சிவாதிகள் தலைநகர் காத்மண்டுவிற்குச் செல்லும் இரண்டு பிரதான வீதிகளைத் தடைசெய்த மூன்றாவது நாளான நேற்று இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

தலைநகரிலுள்ள அரசாங்க கட்டடமொன்றைக் காவல்காத்துக் கொண்டிருந்த பொலிஸார் ஒருவரைக் கிளர்ச்சிவாதிகள் சுட்டதாக நேபாளப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்துக்கு முன்னர் அரச கட்டடத்திற்குச் செல்லும் வழியில் குண்டொன்று மறைத்து நாட்டப்பட்டிருந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இரண்டாவது குண்டுத்தாக்குதல் தலைநகருக்கு வெளியே உள்ள படையினரின் காவல் நிலையம் ஒன்றின்மீது நடத்தப்பட்டது. குண்டு வெடித்தவேளை காவலரணில் படையினர் எவரும் இல்லாத காரணத்தினால் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

கிளர்ச்சிவாதிகளின் வீதித் தடையை அடுத்து தலைநகரில் பெற்றோல் விநியோகம் பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் உணவுப் பொருட்களுக்கான விலைகளும் அதிகரித்துள்ளதுடன், அவற்றுக்குப் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, தற்போதைய பிரச்சினைக்கு இருபகுதியினரும் உடனடியாக யுத்தநிறுத்தத்தை மேற்கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தைகயை ஆரம்பிக்கவேண்டுமென வர்த்தகர்கள் அவசர வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

பதினொரு மிகப்பெரிய வர்த்தக நிலையங்கள் மற்றும் ஆடம்பர ஹோட்டல்கள் என்பன கடந்த செவ்வாயிலிருந்து மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

கடந்த செவ்வாய்க்கிழமை வீதிகள் தடைசெய்யப்பட்ட பின்னர், நேற்று ஓரளவு வாகனங்கள் தலைநகர் காத்மண்டுவிற்கு வந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தாக்குதலுக்கு தயாராகும் சீனா

சீனாவுக்கும் தாய்வானுக்கும் இடையே கடந்த சில ஆண்டுகளாகப் பதற்றம் அதிகரித்துவருகிறது. தாய்வான்-சீனாவின் ஒருங்கிணைந்த பகுதிதான், அதற்குத் தனி சுயாட்சி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால, தனிநாடாகத் தாய்வான் தன்னைத்தானே அறிவித்தால் அதன் மீது தாக்குதல் நடத்துவோம் என்று சீனா எச்சரித்துள்ளது. தாய்வானை நோக்கிச் சீனா ஏராளமான ஏவுகணைகளையும் நிறுத்திவைத்திருக்கிறது.

உலகிலேயே இராணுவ வீரர்கள் அதிக எண்ணிக்கை உள்ள நாடு சீனாதான். தலைநகர் பீஜிங்கில் இராணுவக் கண்காட்சி இப்போது நடைபெற்றுவருகிறது. ஏராளமான பொதுமக்களும் விதவிதமான போர் விமானங்களின் மாதிரிகளை உருவாக்கி இந்தக் கண்காட்சியில் வைத்துள்ளனர். தள்ளுவண்டியில் தான்



உருவாக்கிய மாதிரி விமானத்தை வைத்து ஒருவர் கண்காட்சிக்குச் செல்லும் காட்சி

# அல்கொய்டா அமைப்புடன் தொடர்புடைய 2 வெளிநாட்டவர் பாகிஸ்தானில் கைது!



பாகிஸ்தான் பெஷாவர் நகரில் நேற்றுமுன்தினம் படையினர் நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போது அல்கொய்டா அமைப்புடன் தொடர்புடைய இரண்டு வெளிநாட்டவர் கைதுசெய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் ஈராக்கியர் எனவும், மற்றையவர் அல்ஜீரியர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

படையினர் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டவேளை சந்தேகநபர்கள் இருவரும் தப்பியோட முயன்றதாகவும் அவ்வேளை இவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டு கைதுசெய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் இருவரையும் கைதுசெய்ததை உறுதிப்படுத்திய பாகிஸ்தானின் உள்துறை அமைச்சு இதுதொடர்பான மேலதிக விபரங்களை வெளியிடவில்லை.

பெஷாவர் நகரில் படையினரால் இரண்டு வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டதனை நான் உறுதிப்படுத்துகின்றேன். அவர்கள் இருவரும் விசாரணைக்குட்படுத்தப்படவுள்ளனர் என பாகிஸ்தான் உள்துறை அமைச்சின் பேச்சாளரான அப்துர் ர.்.ப் தெரிவித்தார்.

இரண்டு சந்தேக நபர்கள் சென்ற வாகனத்தை படையினரின் வாகனம் கலைத்துச்சென்றவேளை அந்த வாகனத்தை நிறுத்துமாறு படையினர் சந்தேக நபர்களைக் கேட்டனர். ஆனாலும், அவர்கள் வாகனத்தை நிறுத்தாமல் செல்லவே படையினர் அவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதுடன், கிரனைட் தாக்குதலையும் நடத்தினர்.

இதன்போது சந்தேக நபர்களின் வாகனத்தில் இருந்த ஒருவர் தப்பிவிட்டார். மற்றையவர் காயங்களுடன் வாகனத்தில் இருந்தவேளை படையினரால் கைதுசெய்யப்பட்டார். இவர் அபு பௌசி எனவும், அல்ஜீரிய நாட்டவர் எனவும் பின்னர் அடையாளம் காணப்பட்டார்.

உலக நோக்கு

# ஜோர்ஜிய - ஒசெஸ்ரிய நாடுகளின் படைகளுக்கிடையில் மோதல்!



(லண்டன்)

ஜோர்ஜிய படைகளுக்கும் ஒசெஸ்ரியப் படைகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் எட்டு ஒசெஸ்ரியப் படையினர் கொல்லப்பட்டதாக ஜோர்ஜிய இராணுவம் தெரிவித்தது. இதேசமயம் தாம் 6 ஜோர்ஜியப் படைகளைச் சுட்டுக் கொன்றுள்ளதாக ஒசெஸ்ரியப் படையினர் தெரிவித்தனர்.

ஜோர்ஜியப் படைகளுக்கும் ஒசெஸ்ரியப் படைகளுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றுள்ளதை உறுதிசெய்துள்ள செய்தி நிறுவனங்கள், அங்கு இடம்பெற்ற சேதவிபரங்கள் தொடர்பாக உறுதிசெய்யமுடியவில்லை எனவும் தெரிவித்தன.

இருநாட்டிற்குமிடையே சமாதான ஒப்பந்தம் ஒன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தோல்வியில் முடிவடைந்ததைத் தொடர்ந்தே இரு நாட்டுப் படைகளுக்கும் இடையில் மேதல்கள் ஆரம்பித்துள்ளன.

ஆனால், மீண்டும் இரு நாடுகளுக்கும் இடையே சமாதான முயற்சிகளை மேற்கொள்ளமுடியும் என ஒசெஸ்ரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஜோர்ஜியாவுடன் இணைந்திருந்த ஒசெஸ்ரிய மாநிலம், 18 மாத யுத்தத்தின் பின்னர் 1992 ஆம் ஆண்டு தனிநாடாகப் பிரிந்துசென்றமை குறிப்பிடத்தக்கது.

## அபூர்வ இன வெள்ளைவால் மான் திருட்டு



அமெரிக்காவில் குறிப்பாக பென்சில்வேனியாக் காடுகளில் வெள்ளைவால் மான்கள் காணப்படுகின்றன. இந்த அபூர்வ இன மான்களின் கொம்புகள் அழகிய பூக்கள் போலக் காட்சி அளிக்கின்றன.

இந்த அபூர்வ இன மான்களைப் பாதுகாக்க தனிப் பண்ணைகளும் உள்ளன. இந்தப் பண்ணையில் இருந்து ஏராளமான மான் குட்டிகளை ஜெப்ரி ஸ்பென்ஸ் என்பவர் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு திருடிவிட்டார்.

கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள இந்த மான்களை வெளிநாடுகளுக்குக் கடத்தவும் அவர் திட்டமிட்டிருநதார். இதையொட்டி அந்த மான்களை மட்டதுடன், ஜெட்லி ஸ்பென்ஸமீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## பூனைகளுக்கு தனியான ஹோட்டல்

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் புதிய ஹோட்டல் ஒன்றை திறந்திருக்கிறார்கள். சோதனை ரீதியில் திறக்கப்பட்டுள்ள இந்தக் ஹோட்டல் அமோக வரவேற்பைப் பெற்றிருக்கிறது. பூனைகளை செல்லப்பிராணிகளாகக் கொண்டு வருபவர்கள் மட்டுமே இந்த ஹோட்டலுக்கு வரமுடியும்.

பூனைகளுக்கு என்று தனித் தட்டில் விதம்விதமான உணவும், அதன் உரிமையாளர்களுக்கு என்று இன்னொரு தட்டில் தனி உணவும் ஒரே மேசையில் வைக்கிறார்கள். பூனை சாப்பிடுவதை ரசித்து பார்த்துக் கொண்டே உரிமையாளர்களும் சாப்பிடலாம். 'பேட்மேன்' டி.வி. தொடரில் நடித்த நடிகை எர்தா கிட் தனது பூனை ருசித்துத் சாப்பிடுவதை ரசித்துப்பார்க்கும் காட்சி



நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# திருமலை-துறைமுகத்துக்குத் தெற்கே புலிகள் பதுங்குகுழிகள் அமைப்பு !

## பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

(திருகோணமலை)

திருகோணமலைத் துறைமுகத்துக்குத் தெற்குப்புறத்தில் பதுங்கு குழிகளையும், சிறிய முகாம்களையும் விடுதலைப்புலிகள் அமைத்திருப்பதற்கான தகவல்கள் கடற்படைக்குக் கிடைத்திருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் தெரிவித்தார்.

இலங்கை கடற்படை இது தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு முறைப்பாடு செய்துள்ளது.

இது குறித்து விசாரணை நடத்தப்போவதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது. இது தொடர்பான அறிக்கையொன்றை வழங்குமாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் அரசாங்கம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

கொழும்பு மற்றும் கிழக்கு மாகாணத்தில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறாத வண்ணம் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருக்கிறது. கடந்தவாரம் தேசிய பாதுகாப்புச் சபையில் இது குறித்து ஆராயப்பட்டது. இதற்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

புலனாய்வுப் பிரிவினருக்கும் பொலிஸாருக்கும் இடையிலுள்ள தொடர்புகளை அதிகரிப்பதன் மூலம இந்தக் கொலைகளை கட்டுப்படுத்த முடியும் என்றும் செயலாளர் சிறில் ஹேரத் தெரிவித்தார்.



இடமாற்றம் பெற்றுச்செல்லும் மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால, தனது பொறுப்புக்களை புதிதாக யாழ்.மாவட்ட் கட்டளைத் தளபதியாகப் பதவியேற்கும் மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனிடம் கையளிப்பதைக் காணலாம்.

# இடைக்கால நிர்வாகப் பேச்சுக்களில் சகல இனத்தவருக்கும் பிரதிநித்துவம்

## ரவூப் ஹக்கீம் கோரிக்கை

(கொழும்பு)

இடைக்கால நிர்வாக அதிகார சபை தொடர்பான யோசனைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசாங்கம் நிகழ்சி நிரலொன்றைத் தயாரிக்கும்போது சகல இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அது இருக்கவேண்டும் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் நாடாளுமன்றத்தில் நேற்று விஷேட உரைநிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாக அதிகார சபை தொடர்பாக அரசாங்கம் யோசனைகளை முன்வைக்க இருப்பதாக சமாதான செயலகத்தின் செயலாளர் நாயகம் ஜயந்த தனபால தெரிவித்திருக்கிறார்.

கடந்த அரசாங்கமும் இவ்வாறான யோசனைகளை முன்வைத்தது. இந்த விடயத்தில் பேச்சுவார்த்தைகள் இடம்பெறும்போது முஸ்லிம் பிரதிநிதித்துவமும் இருக்க வேண்டும் என்பது கடந்த காலங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

எதிர்காலத்தில் இடம்பெறும் இவ்வாறான பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் பிரதிநிதித்துவத்துக்கும் வாய்ப்பு வழங்கப்படவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் வேண்டுகோள் விடுத்தார்.

## ஆற்றில் மூழ்கிய...

இரண்டு மணிநேரத் தேடுதலின் பின்னர் சடலம் மீட்கபபட்டது. சம்பவ இடத்திற்குச் சென்ற பருத்தித்துறை மாவட்ட பதில் நீதிவான் சபா.ரவீந்திரா சடலத்தை வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய சாலைக்குக் கொண்டுசென்று பிரேதப் பரிசோதனையை மேற்கொள்ளுமாறு வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்கு உத்தரவிடடார். இதன்பின் சடலத்தை மாவட்ட வைத்தியசாலைக்கு பொலிஸார் கொண்டுசென்றனர். அங்கு மாவட்ட வைததிய அதிகாரி மயிலேறும் பெருமாள் பிரேத பரிசோதனையை மேற்கொணடு நீரில் மூழகியதால் ஏற்பட்ட மரணமெனத் தெரிவித்தார். இதன்பின் நேறறுமாலை சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (12)


## மரண அறிவித்தல்

### திருமதி ஐயாத்துரை இரத்தினேஸ்வரி

அல்வாய் மடத்துக் கடவையைப் பிறப்பிடமாகவும் துரை அகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஐயாத்துரை இரத்தினேஸ்வரி 20.08.2004 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா ஐயாத்துரையின் அன்பு மனைவியும, காலஞ்சென்றவர்களான திருதிருமதி தம்பு இலக்குமி ஆகியோரின் ஏக புத்திரியும், காலஞ்சென்றவர்களான திருதிருமதி பொன்னையா முத்துப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும் த.கனகசபை, காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும்,

துரைரத்தினம் (ஆதாரவைத்தியசாலை, பருத்தித்துறை), யோகரத்தினம் (காவல்துறை, கிளிநொச்சி), உதயரத்தினம் (பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சமாசம்), பொன்அரசன், கேமச்சந்திரா, திருமதி ந.இரத்தினமாலா, திருமதி செ.யோகமாலா, திருமதி க.உதயமாலா, (கனடா), அனோஜா (2 ஆம் வருடமாணவி, தேசியகல்வியியற் கல்லூரி. யாழ்ப்பா ணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும்,

Dr. ந.நடராஜலிங்கம் (ஸ்ரீபதி லம்போதரன் கிளினிக், உரும்பிராய்), தி.செல்வநாதன் (பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் முல்லைத்தீவு), இ.கணேசலிங்கம், து.இராசவதி, யோ.சிவநந்தினி, உ.ஜீவதேவி (பிரதேசசபை, கரவெட்டி), பொ.ரதனி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21.08.2004 (சனிக்கிழமை) இன்று பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் அல்வாய் பங்குவேம்படி மயானத்தில் இடம்பெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"துரை அகம்"
அல்வாய்

தகவல்
ஐ.உதயரத்தினம்
(மகன்)

(சி/2963)


## புலிகளின்...

படையினருக்கும் இடையிலான தொடர்புகளை ஒட்டுக்கேட்கும் சக்தி வாய்ந்த ஜந்த அன்ரனாவை கைப்பற்றுவதற்கென பொலிஸ்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் செய்மதி அன்ரனாக் கருவியானது கொழும்புத்துறை முகத்திலிருந்து சுமார் 100 மீற்றருக்கும் 200 மீற்றருக்கும் இடையிலான தூரத்திலேயே பொருத்தப்பட்டிருப்பதாகவும் பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன. (01)

## பேச்சுக்களில்.....

இலங்கையின் சமாதான முயற்சிகளில் மூன்றாவது தரப்பாகவே செயற்பட்டுவரும் நோர்வே, இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கான உதவியினை அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் செய்துவருகிறது.

மட்டக்களப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்புக்கள் மீண்டும் ஏற்படுத்தப்பட வேண்டும். இதன் மூலமே இனங்களுக்கிடையிலான நல்லுறவையும், சுமுகமான சூழ்நிலையையும் பேண முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அளவெட்டிப்...

இவரை வழிமறித்த சிலர், கடத்திச்சென்றனர்.

பினனர் இவர் வாளால் - தலை, கை, முதுகு போன்ற பகுதிகளில் வெட்டி கொலைசெய்யப்பட்டார். இவரது சடலத்தை கடத்திச்சென்ற அளவெட்டி வயல் பகுதியில் போட்டு விட்டுச் சந்தேக நபர்கள் தப்பிச் சென்றனர்.

சம்பவம் தொடர்பாக அறிந்த இளவாலை பொலிஸார் தேடுதல் நடத்தியபோது - அளவெட்டி வயற்பகுதியில் மோட்டார் சைக்கிள், ஹெல்மட் மோதிரம் போன்ற பொருட்களைக் கண்டெடுத்தனர்.

மேற்படி நபரின் சடலதுதை மல்லாகம் மாவட்ட நீதிவான் சரோஜினி இளங்கோவன் சென்று பார்வையிட்ட பின்னர், பிரேதப் பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலலக்கு எடுத்துவரப்பட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. கொலைசெய்யப்பட்ட இளைஞர் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே ஹைஏஸ் வான் சேவை நடத்துபவராவார்.

அளவெட்டிப்பகுதியில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற திருமணத்தை இளைஞர் ஒருவர் குழப்பவுள்ளார் எனத் தெரிவித்துப் பெண் வீட்டார் இளவாலைப் பொலிஸில் புகார் செய்திருந்தனர்.

இதனால் குறித்த இளைஞன் திருமணம் நடைபெறும்வரை பொலிஸாரின் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். நேற்றுமுன்தினம் இந்தத் திருமண நிகழ்வை நடத்தி வைத்தவரும, பொலிஸாரால் மேற்குறிப்பிட்ட இளைஞர் கைதுசெயயப்படக் காரணமாக இருந்தவருமான இளைஞரே படுகொலை செய்யப்பட்டதாகக் கருதப்படுகிறது.

தடுப்புக் காவலில் இருந்தவரின் சகோதரரே இந்தக் கொலையைச் செய்திருக்கலாமெனப் பொலிஸார் சநதேகம் வெளியிட்டனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக இளவாலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## அரசாங்கமும்...

எடுக்க வேண்டும்.

அரசுடன் சமாதானப் பேச்சுக்களை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு விடுதலைப் புலிகள் சாதகமான பதிலை வழங்குவதன் அடிப்படையில் சமாதானச்சூழல் ஏற்படுமாயின் அமெரிக்கா இலங்கையில் பல்வேறு மீள்கட்டுமான பணிகளுக்கான நிதியுதவிகளை வழ்ங்க முடியும் என்று இருவரும் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா 2002 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்திய போர்நிறுத்த உடன்படிக்கையை முன்னெடுக்க வேண்டும் என்பதிலும், சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதிலும் உறுதியாக இருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மேஜர் ஜெனரல்...

தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, முன்னர் யாழ். படைகளின் கட்டளைத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவுக்கு நேற்றுமுன்தினம் பிரியாவிடை அளிக்கப்பட்டது.

யாழ்பாணத்திலுள்ள மதத்தலைவர்களையும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உள்ளிட்ட அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால பிரியாவிடை பெற்றிருந்தார். தொண்டர் படைகளின் தளபதியாகப் பொறுப்பேற்கவுள்ள மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவுக்கு நேற்றுமுன்தினம் காங்கேசன்துறையிலுள்ள 515 ஆவது பிரிகேட்டில் பிரியாவிடை வழங்கப்பட்டது, முதலாவது பொறியியல் படையினரின் அணிவகுப்பு மரியாதையும் அளிக்கப்பட்டது.

## மட்டக்களப்பு...

கருகில் அமைந்துள்ள இராணுவ முகாமின் முன்னரங்க காவலில் ஈடுபட்ட இராணுவத்தினரிடம் விசாரித்தபோது, தாக்குதலை மேற் கொண்டவாகள் தப்பிச் சென்றுவிட்டதாக மிகச் சாதாரணமாக பதிலளித்தனர்.

புல்லாவிச் சந்திப்பகுதியில் மேலதிக காவலரணை உருவாக்கியுள்ள படையினர் எந்தவேளையிலும கடமையில் இருப்பதால் அவர்களுக்குத் தெரியாமல் இந்தத் தாக்குதல் நடந்திருக்க வாய்ப்பில்லையென காயங்கேணி மக்கள் தெரிவித்தனர்.

நேற்று இடம்பெற்ற தாக்குதலின் போது-அம்பாறை மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பியதாகத் தெரியவருகிறது. உயிரிழந்த பாவாவுடன் பயணம்செய்த குயிலின்பனின் மோட்டார் சைக்கிளும் இந்தத் தாக்குதலில் சேதமடைந்தது.

கிளைமோர் தாக்குதல் நடந்த பின்னர்-தம்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும், இதன்பின்னர் தாக்குதல் நடத்திய மூவர் தப்பிச்சென்றதைத் தான் கண்டதாகவும் குயிலின்பன் பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

இதேவேளை-நேற்றைய தாக்குதலில் கொல்லப்பட்ட பாவா அம்பாறை மாவட்டத்தில் அரசியற் துறைப் பொறுப்பாளராக முன்னர் இருந்தவேளை தமிழ்மக்களிடம் மட்டுமன்றி முஸ்லிம் மக்களிடமும் பெரும் நன்மதிப்பைப் பெற்றவர்.

காணிப்பிரச்சினை தொடர்பாக முஸ்லிம்களுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளிளெல்லாம் இவர் மிகவும் நேர்மையான முறையில் நடந்துகொண்டதனால் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே மிகவும் நன்மதிப்பைப் பெற்றிருந்தார்.

அத்துடன், அம்பாறை மாவட்டத்தில் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே முறுகல் நிலை ஏற்பட்டபோதெல்லாம் அதனைச் சுமுகமான முறையில் தீர்த்து வைப்பதில் முன்னின்று உழைத்தவராவார். இவா கொல்லப்பட்ட செய்தி நேற்றுத் தெரிநதவுடன் அம்பாறையில் தமிழ்ப பிரதேசங்கள் மட்டுமல்ல முஸ்லிம்களின் பிரதேசங்களும் சோக வெள்ளத்தில் மூழ்கியிருந்தன. (07)




## ஒலிம்பிக் பதக்க விபரம்

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐக்கிய அமெரிக்கா | 17 | 12 | 11 | 40 |
| சீனா | 15 | 11 | 10 | 36 |
| ஜப்பான் | 12 | 4 | 3 | 19 |
| அவுஸ்ரேலிய | 8 | 5 | 8 | 21 |
| ரஷ்யா | 5 | 11 | 12 | 28 |
| இத்தாலி | 5 | 6 | 3 | 14 |
| ஜேர்மனி | 5 | 5 | 9 | 19 |
| பிரான்ஸ் | 5 | 5 | 6 | 16 |
| உக்ரெயின் | 5 | 1 | 2 | 8 |
| தென்கொரியா | 4 | 8 | 3 | 15 |
| துருக்கி | 3 | 0 | 1 | 4 |
| நெதர்லாந்து | 2 | 5 | 5 | 12 |
| கங்கேரி | 2 | 3 | 1 | 6 |
| ஸ்லோவாக்கியா | 2 | 2 | 1 | 5 |
| ருமேனியா | 2 | 0 | 2 | 4 |
| தாய்லாந்து | 2 | 0 | 2 | 4 |
| கிறிஸ் | 2 | 0 | 1 | 3 |
| பிரிட்டன் | 1 | 4 | 4 | 9 |
| போலந்து | 1 | 2 | 1 | 4 |
| பலாரஸ் | 1 | 1 | 3 | 5 |
| தென்ஆபிரிக்கா | 1 | 1 | 1 | 3 |
| சிம்பாப்வே | 1 | 1 | 1 | 3 |
| ஜோர்ஜியா | 1 | 1 | 0 | 2 |
| பல்கேரியா | 1 | 0 | 2 | 3 |
| சுவிற்சர்லாந்து | 1 | 0 | 1 | 2 |
| ஐக்கிய அரபு | 1 | 0 | 0 | 1 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 21.08.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.